ஸ்ரீ

கம்பநாட்டாழ்வார் இயற்றியருளிய

# சரசுவதியந்தாதி.

வை. மு. சடகோபராமாநுஜாசார்யரும்

சே. கிருஷ்ணமாசார்யரும்

இயற்றிய உரையுடன்

சென்னை:

ஆர். ஜி. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஈசுவர ௵

விலை. அணு ௪.

சே. கிருஷ்ணமாசார்யர்,

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை

19, தென்னண்டை மாடவீதி,

திருவல்லிக்கேணி.

# கம்பர் வரலாறு.

உ

இவர், சோழநாட்டிலே திருவழுந்தூரில் நாஈசாம்வருணத்திற்பிறந்தவர்.

இவரது சமயம், வைஷ்ணவமே.

இவர், இளமையிலேயே தந்தை இறந்ததனால், போஷகரில்லாமல் தாயுடனே திருவெண்ணெய்நல்லூரில் சடையப்பரென்னும் வள்ளலினிடம் போய்ச்சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்று, அவர்வீட்டுப்பிள்ளைகளுக்குப் பாடசாலைக்குப்புத்தகமெடுத்துக்கொண்டு போகின்றவராய் அவர்களுடன் படித்துவந்தனர். இவர்க்குச் சரசுவதீகடாக்ஷமும், கம்பரென்னும்பெயரும் உண்டானதைப்பற்றி ஒரு கதை உண்டு: இவர் அங்ஙனம் பள்ளியிற் படித்துவருநாளில், அவ்வுபாத்தியாயர், தமக்கு வைரபுரமென்னுங் கிராமத்திலுள்ள கம்பங்கொல்லை தினைக்கொல்லைகளைக் காப்பதற்காகத் தம்மிடத்திற் படிக்கும் பிள்ளைகளைத் தினம் ஒவ்வொருவராக அனுப்பும் முறைப்படி ஒருநாள் இப்பிள்ளையை அனுப்ப, இவரும் அன்று காலைதொடங்கிக் கொல்லையிற் காத்துவந்து நல்லவெயிலில் நித்திரை வந்ததனால், அக்கொல்லையினருகிலிருந்த காளிகோயிலிற் போய்ப் படுத்துத்தூங்கினார். தூங்குகையிற் கொல்லையில் ஒருகுதிரை வந்து மேய்வதாகக் கனாக்கண்டு எழுந்து பார்க்க, கனவிற் கண்டபடியே பயிரை அவ்வூராள்வோனாகிய காளிங்கராயனது குதிரை மேயக் கண்டு, அதனைத் துரத்தியும் அது போகாமையால் அஞ்சி நடுங்கிக் காளிகோயிலுக்கெதிரேபோய்நின்று புலம்பினார். அதுகண்டு காளி கருணைகூர்ந்து பிரசன்னையாகி, 'பிள்ளாய்! அழாதே; உன் நாவை நீட்டு' என்றாள். இவர் அங்ஙனமே நீட்ட, தேவி அதிற் பீஜாக்ஷரத்தை எழுதி அநுக்கிரகித்தனள். பின்பு இவர் திரும்பிச்சென்று கொல்லையிற் போய்ப்பார்க்க, அப்பொழுதும் குதிரை அப்புறம்போகாது அங்கேயே மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது காளிகாதேவியின் அனுக்கிரகத்தாற் சரசுவதீகடாக்ஷம் பெற்ற இவரது வாக்கினின்றும், அதுகண்ட கோபத்தால், தற்செயலாக, "வாய்த்த வயிரபுரமாகாளியம்மே கேள், காய்த்ததினைப்புனத்துக் காலைவைத்துச்—சாய்த்துக், கதிரை மாளத்தின்ற காளிங்கராயன், குதிரை மாளக் கொண்டுபோ" என்று ஒருகவி உண்டாயிற்று. அங்ஙனம் இவர் பாடியவுடனே அக்குதிரை கீழே விழுந்து இறந்தது. அதனைக் கேட்டறிந்த உபாத்தியாயர் ஓடிவந்துபார்த்து, அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவோமேயென்று கலக்கமுற, இவர், முன்பு பாடிய வெண்பாவின் நான்காம்அடியை "குதிரை மீளக் கொண்டுவா" என்று திருப்பிப்பாட, மாண்டகுதிரை மீண்டெழுந்தது. காளிங்கராயன் இதனைக் கேள்வியுற்று அக்காலத்தில் அரசுசெலுத்திவந்த குலோத்துங்க னென்னுஞ் சோழனுக்கு அறிவிக்க, அவன் அச்சிறுவனைத் தான்பார்க்கவேண்டுமென்று வருவித்தனன். அங்ஙனமே இவர் கோலுங்கையுமாய்ப் போய்நிற்க, அவன், *'இக்கம்பனா அங்ஙனஞ் செய்தவன்?'

* கம்பன் - கம்புடையவன்; கம்பு=கொம்பு. உலகவழக்கு.

என்றனன். இதனாலும், கம்பங்கொல்லையைக் காத்ததனாலும், இவர்க்குக் **கம்பர்** என்று பெயராயிற்று: இதற்கு வேறு சில காரணமுங் கூறுவர். இவர் பின்பு சோழராஜனது ஸம்ஸ்தாந வித்துவான்களுக்குத் தலைவராகி இராச சபைக்கு நாள்தோறும் சென்று சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பல கவிகள் பாடிப் பிரசங்கிக்கத் தலைப்பட்டு "புவிச்சக்ரவர்த்திகள் போற்றிப் பழிச்சுங், கவிச்சக்ரவர்த்தியாங் கம்பர்" என்பது போன்ற பலவிருது கூறப் புலமை செலுத்திவந்தனர். இவர்க்கு **அம்பிகாபதி** யென்று ஒருமகன் பிறந்து, அவனும் சிறந்த வித்துவானாகிஇவரோடு ராஜசபைக்கு நாடோறும் போய்ப் பெருமைபெற்றுவந்தனன்.

கம்பர் இராமாயணம் பாடியது, சடையப்பவள்ளலினது பெருமுயற்சியால். எங்ஙனமெனின்,—அவர் மகாகவியாகிய கம்பரது புலமைத்திறம் விளங்குமாறு இவரை ஏதாவது ஒரு பிரபந்தம் பாடும்படி செய்யவேண்டுமென்று சோழராசனுக்கு அறிவிக்க, அவன் தனியே ஒருவரைப் பாடச் செய்தலினும் இருவரை ஒருசேரப் பாடும்படி செய்தாற் புலமைத்திறம் நன்கு விளங்குமென நினைத்து, **கம்பர்ஒட்டக்கூத்தர்** இருவரையும் 'ஸ்ரீராம சரித்திரத்தைத் தமிழ்ப்பாவினாற் பாடி முடிக்கவேண்டும்' எனக் கட்டளையிட்டனன். கட்டளையிட்டபின்பும் கம்பர் பலநாள் பாடாமலேயிருந்து, ஒட்டக்கூத்தர் சுந்தரகாண்டம் வரையிற் பாடி முடித்து யுத்தகாண்டம் பாடிக்கொண்டிருக்கையில், மறுபடி அரசனால் ஏவப்பட்டு, இவ்விராமாயணம் பாடினார். பாடுகையிற் பிரதிதினம் இராப்பொழுதெல்லாம் வடமொழிப்புலவர்களை வைத்துக்கொண்டு வால்மீகம் ஆத்யாத்மம் போதாயநம் முதலிய ராமாயணங்களையும், பலபுராணங்களையும் ஆராய்ச்சி செய்து, பகற்பொழுதிலே நாளொன்றுக்கு எழுநூறு பாடல் விழுக்காடு யுத்தகாண்டம் வரையில் ஆறு காண்டமும் பதினாயிரத்துச் சில்லறை பாடல்களாற் பதினைந்து நாளிற் பாடி முடித்தனர். அங்ஙன மிருக்கையில் ஒருநாள், கம்பர், ஒட்டக்கூத்தர் வீட்டு வாயிலின் வழியே போகையில், அவர், தாம்செய்த இராமாயணம் **கம்பராமாயணத்திற்கு** முன் தலையெடாதென அறிந்து அதனைக் கிழித்தெறிந்துகொண்டிருக்க, கண்டு, அவ்விடஞ் சென்று, அதற்குள் யுத்தகாண்டம் வரையிற் கிழிபட்டுப் போகவே, மிச்சமான உத்தரகாண்டத்தை அப்படியே கிழியாது வைத்திருக்க வேண்டிக்கொண்டார்; அதுவே கம்பராமாயணத்திற்கு ஏழாவது காண்டமாக வழங்கலாயிற்று. கம்பர் அம்பிகாபதிக்கு விவாகம்நடத்தியபோது சடையப்ப வள்ளல் சிறிதுகாலந்தாழ்த்துவந்ததனால் இருக்க இடம் பெறாது சலதாரையோரத்தில் ஒதுங்கி நின்றதைப் பார்த்து வருந்திய தம்மனைவியை நோக்கி 'இவரை நாம் வைக்கவேண்டியஇடத்தில் மேலாகவைப்போம்' எனக்கூறியிருந்தபடி, தம்மை ஆதரித்த அச்சடையப்பப்பிரபுவை நன்றிமறவாமையால் இராமாயணத்தில் அங்கங்கே சிறப்பித்துச்சொல்லியிருக்கிறார். பின்னர் இராமாயணம், திருவரங்கம்பெரியகோயிலில் மோட்டழகியசிங்கர்

சிரக்கம்பஞ் செய்யுமாறு நாதமுனிகள் திருவோலக்கத்தில் அரங்கேற்றப் பட்டது. அந்தக் காலம் முதலியவற்றை,

"எண்ணிய*சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே" எனக் காண்க.

இவர் சரசுவதியந்தாதி பாடியதைப்பற்றி வழங்குவதொரு வரலாறு:— கம்பர் ஒருகால் சோழராசனோடு மனஸ்தாபப்பட்டுச் சோழநாட்டைவிட்டுச் சேரநாடுசேர்ந்து கம்பரிடத்தில் அடைப்பக்காரனா யிருந்தவ னென்று தம்மைச் சொல்லிச் சேரராசனிடத்தில் அடைப்பைக்காரனா யமர்ந்து அங்குத் தமதுகல்வித்திறத்தைக் காட்டி அரசனுடைய அன்பையும் மதிப்பையும் பெற்றுச் சிறந்து வாழ, அதுகண்ட அந்தச் சேரசம்ஸ்தான வித்துவான்கள் பொறாமைகொண்டு ஓர் அம்பட்டனுக்குப் பொருள்கொடுத்து அவனைக் கொண்டு அடைப்பக்காரனாயிருந்த கம்பரைத் தனது தமையனென்று சொல்லிச் சாதித்து அவமானப்படுத்த முயன்றார்கள். அப்பொழுது கம்பர் சரசுவதியைத் தியானித்து 'தாயே! இந்த ஆபத்துக்காலத்தில் அடியேனைப் பாதுகாக்கும் பொருட்டுத் திருவுள்ள மிரங்கி உனது இடக்காற் சிலம்பை என்னிடம் கொடுத்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வாறே நாமகள் அனுக்கிரகித்ததனால், அவளுடைய வச்சிரச்சிலம் பொன்று உடனே கம்பர் கையிற் கிடைத்தது; அதனை அவர், அரசனுக்குக்காணிக்கையாகக்கொடுத்து 'இதன் இனமான மற்றொன்று என் தம்பியான இந்த அம்பட்டனிடத்தில் இருக்கிறது; அதனையும் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று வேண்டினார். காண்பவர் கண்கூசும்படி சொலிக்கின்ற அவ்வொற்றைச்சிலம்பைக் கையில் வாங்கிப் பார்த்து ஆச்சரியங்கொண்ட அரசன் அந்த அம்பட்டனை நோக்கி 'உன்பங்கிலுள்ள மற்றொரு சிலம்பைக் கொண்டுவா' என்று சொல்ல, அவன்மிகஅஞ்சி 'இல்லை' என்றான். கம்பர் அதனைப் பொய்ச்சாதனை யென்று வற்புறுத்திக் கூற, அரசன்கட்டளைப்படியேஏவலாளர் அம்பட்டனைக் கட்டியடிக்கலானார்கள். அடிபொறுக்கமாட்டாமல் அவன் 'இந்த அடைப்பைக்காரருக்கும் எனக்கும் யாதொருசம்பந்தமுமில்லை, இந்தச் சம்ஸ்தான வித்துவான்கள் என்னைக்கொண்டு இப்படி யெல்லாம் செய்வித்தார்கள்' என்று உண்மையைச் சொல்லிநிலைநிறுத்தினான். பின்பு அரசன் கம்பரை நோக்கி 'இந்த அற்புதச்சிலம்பு உனக்கு ஏது?' என, கம்பர் 'இது சரசுவதியினது' என்று சொல்லிஅதனை மெய்ப்பிக்கும் பொருட்டுச் சரசுவதியைத்தியானித்துச் சரசுவதியந்தாதி யென்னும் இந்நூலைப் பாடித் தோத்

* சகாத்தம்-சாலிவாகநசகாப்தம்: இப்பொழுது நடப்பது, ௧௮௫௯; ஆகவே, கம்பர்காலம் இப்பொழுதைக்கு ஆயிரவருஷங்களுக்குமுன்புஎன்க. சிலாசாசநபரிசோதகர், முதலாவது குலோத்துங்கசோழன் பிறந்த காலம் ௮௫௦ - வருடங்களுக்கு முன்பு என்பர் ௧௫௦ வருடம் வித்தியாசப்படும்.

திரித்தவளவிலே, அக்கலைமகள் ஒற்றைக்காற்சிலம்பு ஒலிக்க நடனஞ்செய்து கொண்டு பிரத்தியக்ஷமாகத் தோன்றி 'எங்கே சிலம்பு?' என்று கம்பரைக் கேட்க, இவர் அரசன்கையி லிருந்த சிலம்பை வாங்கி அத்தேவியின் இடத் திருவடிக்கு நேரே நீட்ட, அது அத்திருவடியிற் போய் ஏறினமாத்திரத்தில், கலைவாணி அந்தர்த்தான மாய்விட்டாள். அதுகண்டு வியந்தசேரன் கம்பரை நன்குவிசாரித்து அவர் இன்னாரென்ற உண்மையை அறிந்துகொண்டான்.

இவர்செய்த வேறுநூல்கள் - ஆழ்வார்நூற்றந்தாதியென வழங்குகின்ற சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம்முதலியன.

இவர்காலத்துஇருந்த வித்துவான்கள் - புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவை முதலியோர்.

இவர் சரித்திரவிவரத்தை விநோதரசமஞ்சரி, புலவர்புராணம்முதலிய நூல்களிற் காணலாம்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்தமென்னு
மொண்பாவி லுயர்கம்பன் கோவை யுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணாதே"

என்பதனால், இவர், விருத்தம்பாடுதலில் மிகச்சிறந்தவரென விளங்கும்.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிசொல்லும்', 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்ற பழமொழிகள் இவரது கல்வித்திறத்தை மெச்சி வழங்கியன.

ஸ்ரீ

# சரசுவதி யந்தாதி.

சரசுவதியினது அந்தாதி என விரியும்; சரசுவதியின் விஷயமாக அந்தாதித்தொடையாற் பாடப்பட்டதொரு பிரபந்த மென்பது பொருள். இத்தொடர்மொழியில் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை யுருபின் பொருளாகிய சம்பந்தம், விஷயமாக வுடைமை; விஷ்ணுபுராணம், விநாயகரகவல் என்பவற்றிற் போல. ஸரஸ்வதி என்ற வடசொல்-(எங்கும்) வியாபித்தலையுடையவளென்று காரணப்பொருள்படும். இவள் - பிரமன்மனைவி, கல்விக்குஉரிய தெய்வம். அந்தாதி - அந்தத்தை ஆதியாக உடையது; வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; வடமொழித் தொடர்: தீர்க்கசந்தி: அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது-ஒருசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. இங்ஙனம் பாடும் நூலின் ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமைதல், மண்டலித்த லெனப்படும். இது, தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றும். இதனைச் சிறுகாப்பியத்தில் அடக்குவர் ஒருசாரார்.

இந்நூல் - முதலிற் காப்புச்செய்யுளாகவுள்ள இரண்டு வெண்பா நீங்கலாக முப்பது கட்டளைக்கலித்துறைகளால் அமைந்தது.

## காப்பு.

காப்பு - காத்தல்; 'பு' விகுதி பெற்ற தொழிற்பெயர்: அது - இங்கு, காக்கின்ற கடவுளின்விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர். ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திர மென்பது கருத்து.

இக்காப்பு இந்நூலாசிரியர்க்கு இஷ்டதேவதையும் இந்நூலுக்குத் தலைவியுமான சரசுவதியின் விஷயமான தாதலால், இதனை, வழிபடுகடவுள் வணக்கத்தோடு ஏற்புடைக்கடவுள்வணக்கமு மாகுமென்று கொள்ளலாம். (வழிபடுகடவுள் - தம்மாற் பூசிக்கப்படும் தெய்வம். ஏற்புடைக் கடவுள் - தாம் பாடத்தொடங்கிய நூலுக்கு ஏற்ற தெய்வம்.)

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

(இதன்பொருள்.) ஆய - பொருந்திய, கலைகள் அறுபத்து நான்கினையும் - அறுபத்துநான்குவகைக் கல்விகளையும், ஏய - தகுதியாக [உரியபடி], உணர்விக்கும் - (தனக்கு அடிமைப்பட்ட என்போலியர்க்குத்) தெரியச் செய்தருளுகின்ற, என் அம்மை - எனது தாய் போன்றவளும்; தூய உரு பளிங்கு

போல்வாள் - பரிசுத்தமான திருமேனி ஸ்படிகம்போல வெண்ணிறமாக இருக்கப்பெற்றவளும் ஆகிய சரசுவதிதேவி, என் உள்ளத்தினுள்ளே இருப்பள் - எனது மனத்திலே (எப்பொழுதும்) எழுந்தருளியிருக்கிறாள்; (ஆதலால்), இங்கு இடர் வாராது - இவ்விடத்தில் துன்பமொன்றும் வரமாட்டாது; (என்றவாறு.)

கலைகளெல்லாவற்றிற்குந் தலைவியும், அவற்றையெல்லாம் தனது அடியார்க்கு அருள்பவளும், சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று வகைக் குணங்களுள் சத்துவகுணத்தையே யுடையளென்பது தோன்ற வெண்ணிறமாய் விளங்குபவளும், தன் அடியாரது புலமைத்திறத்துக்கு இடையூறு நேரிடாதபடி பரிபாலிப்பவளும், ஒருகால் இடையூறு நேர்ந்தாலும் அதனை உடனே ஒழிக்கவல்லவளு மான சரசுவதியை யான் வழிபடுகடவுளாகக் கொண்டு அன்போடு தியானிக்கின்றே னாதலால், அவள் யான் நினைத்த வண்ணமாய் எனது உள்ளக்கமலத்தில் வந்து எழுந்தருளியிருக்கிறாள். ஆதலால், யான் இயற்றத்தொடங்கிய இப்பிரபந்தத்துக்கும், மற்றும் யான் விரும்பும் நற்பேறுகளுக்கும் இடையூறொன்றும் வரமாட்டா தென்று துணிந்து கூறியவாறும்.

ஆய - ஆகிய, இறந்தகாலப் பெயரெச்சம்: ய் - காலங்காட்டும் இடைநிலை. கலா, அம்பா, ரூபம், ஸ்படிகம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கலைஞானம் அறுபத்து நான்கு - சுருதி, ஸ்மிருதி, இதிகாசம், புராணம், தர்க்கம், வியாகரணம், சோதிஷம், வைத்தியம், சில்பம், கணிதம், சங்கீதம், நாட்டியம் முதலியன; அகராதியிற் காண்க. உம்மை - முற்றுப்பொருளது. ஏய - செயவெனெச்சம்; ஏய் - பகுதி. மிக்க அன்புடைமையும், நன்குமதிக்கப்படுதலும்பற்றி, 'அம்மை' என்றார். இருப்பள் என்பதில், பகரவிடைநிலை-எதிர்கால முணர்த்தாது தன்மைமாத்திரத்தை உணர்த்திற்று. 'இங்கு' என்பது - மூவிடங்களுள் தன்மையிடத்தை உணர்த்தும்; என்னிடத்து என்றபடி. வாராது என்ற எதிர்மறைமுற்றில், ர் - விரித்தல்விகாரம்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையு
மல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

(இ - ள்.) (சரசுவதிதேவியினுடைய), படிகம் நிறமும் - ஸ்படிகம் போன்ற வெண்ணிறத்தையும், பவளம் செவ் வாயும் - பவழம்போலச் சிவந்த வாயையும், கடி கமழ் தாமரை பூ போல் கையும் - வாசனைவீசுகிற (செந்)தாமரைமலர் போலச் சிவந்த திருக்கைகளையும், துடி இடையும் - உடுக்கை போன்ற இடையையும், அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்-இரவும் பகலுமாகிய எப்பொழுதும் (இடைவிடாது) தோத்திரஞ்செய்தால், கல்லும் கவி சொல்லாதோ - (அசேதனமாகிய) கல்லும் கவிபாடமாட்டாதோ? [தவறாது பாடுமென்றபடி]; (எ - று.)

எவ்வளவு அறிவினர்களும் சரசுவதியைத் தோத்திரித்தால் அவளருள் பெற்றுக் கவிபாடக் கூடுமென்று அவளுடையமகிமையை உணர்த்தியவாறு. வாழ்த்து, வணக்கம், தலைமைப்பொருளுரைத்தல் என்ற மூன்றுவகை மங்கலங்களுள், முந்தின செய்யுள் - தியானமென்னும் மனவணக்கத்தை யுணர்த்தியது: இச்செய்யுள் - தலைமைப்பொரு ளுரைத்தது.

படிகநிறம், பவளச்செவ்வாய், தாமரைபோற்கை என்பன-வினை பயன் மெய் உரு என்ற நால்வகையுவமைகளில் உருவுவமை; (உரு-நிறம்.) துடியிடை - மெய்யுவமை; (மெய் - வடிவு.) உடுக்கைபோல மேலும் கீழும் அகன்று நடுச்சிறுத்திருக்கும் இடை யென்க. ஸ்படிகம், ப்ரவாளம், தாமரஸம், அநவரதம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கவி - தற்சமவடசொல். பாடுவோனை யுணர்த்துவதாகிய இச்சொல்-அவனாற் பாடப்பட்ட செய்யுளை யுணர்த்தும்போது கருத்தாவாகுபெயராம். கடி - உரிச்சொல். கல்லும், உம்-இழிவுசிறப்பு. அநவரதமும், உம்மை - முற்றுப்பொருளது. மற்றை உம்மைகள் - எண்ணுப்பொருளன. சொல்லாதோ என்பதில், இரண்டு எதிர்மறை - உடன்பாட்டுப்பொருளை யுணர்த்தித் தேற்றக்கருத்தை விளக்கும்.

## நூல்.

க. சீர்தந்தவெள்ளிதழ்ப்பூங்கமலாசனத்தேவிசெஞ்சொற்
றார்தந்தவென்மனத்தாமரையாட்டிசரோருகமேற்
பார்தந்தநாதனிசைதந்தவாரணப்பங்கயத்தாள்
வார்தந்தசோதியம்போருகத்தாளைவணங்குதுமே.

(இ - ள்.) சீர் தந்த - சிறப்பு அமைந்த, வெள் இதழ் பூ கமலம் - வெண்ணிறமான இதழ்களையுடைய அழகிய தாமரையை [வெண்டாமரை மலரை], ஆசனம் - இருக்குமிடமாகக்கொண்டு அதில் வீற்றிருக்கிற, தேவி - தலைவியும்,—செம்சொல் தார் தந்த - செவ்வியசொற்களின் வரிசையை உண்டாக்கிக்கொடுத்த [கல்வித்தெய்வமான என்றபடி], என் மனம் தாமரை ஆட்டி - எனது மனமாகிய தாமரைமலரில் வீற்றிருந்து அதனை யாள்பவளும்,—சரோருகம் மேல் - (திருமாலின் திருநாபித்) தாமரைமலரின் மேல் (தோன்றி), பார் தந்த - உலகங்களைப் படைத்த, நாதன் - தலைவனான பிரமதேவன், இசை தந்த - ஸ்வரங்களோடு வெளியிட்ட, ஆரணம் - வேதமாகிய, பங்கயத்தாள் - தாமரைமலரில் வீற்றிருப்பவளுமான சரசுவதியினுடைய, வார் தந்த சோதி - மிகுதியாக வெளிவீசுகிற ஒளியையுடைய, அம்போருகம் தாளை - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, வணங்குதும் - வணங்குவோம், (யாம்); (எ - று.)—ஏ - ஈற்றசை.

ஆதியில் திருமால் தனதுநாபியில் தோன்றிய பிரமனுக்கு வேதங்களை உபதேசிக்க, அவன் பின்பு அவற்றை உலகத்தில் வெளியிட்டன னாதலால், 'சரோருகமேற் பார்தந்தநாத னிசைதந்த ஆரணம்' எனப்பட்டது: "தன்னுந்தி வலயத்துப் பேரொளிசேர், மன்னிய தாமரை மாமலர் பூத்து அம்மலர் மேல், முன்னந் திசைமுகனைத்தான்படைக்க மற்றவனும், முன்னம்படைத்

தனன் நான்மறைகள்" எனத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்ததையுங் காண்க. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிற்கும் உரிய முதற்கடவுளரான திரிமூர்த்திகளில் ஒருவனாதலால், 'நாதன்' என்றார். மனத்தாமரை - இருதயகமலம். அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில் வந்து வீற்றிருத்தல்பற்றி, 'என்மனத்தாமரையாட்டி' என்றார். தார் - மாலை. 'செஞ்சொல் தார் தந்த' என்றது, தாமரையாட்டிக்கு அடைமொழி. செவ்விய பாமாலையைப் பாடிய என்று பொருள்கொண்டு, 'என்' என்பதற்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. ஆட்டி - ஆளன் என்பதன் பெண்பால்; ஆள் - பகுதி, இ - பெண்பால்விகுதி, ட் - எழுத்துப்பேறு, ளகரம் டகரமானது - சந்தி.

வேதத்துக்கு உரிய ஸ்வரம் உதாத்தம் அநுதாத்தம் ஸ்வரிதம் ப்ரசயம் என நான்காம். வேதம் சரசுவதி வாழ்தற்கு இனிய உறைவிடமாதலால், 'பங்கயம்' எனப்பட்டது. மூன்றும் அடியினால், 'நாமகள்' என்னும்படி பிரமனது வேதமோதும் வாக்கில் வசிப்பவளென்பதும் தோன்றும். 'வார்தந்த' என்றதில், வார் என்ற வினைப்பகுதியின்மேல், தா-துணைவினை. வார்தல் - மிகுதல். வணங்குதும் என்ற தன்மைப்பன்மையைக் கவிகளுக்கு உரிய இயல்புபற்றி வந்ததென்றாவது, தன்னைப் போன்ற அடியார்களையும் உளப்படுத்திய தென்றாவது கொள்க. கமலாஸநம், தேவீ, மநஸ், தாமரஸம், ஸரோருஹம், நாதன், பங்கஜம், ஜ்யோதி, அம்போருஹம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கமலாஸநம் - தீர்க்கசந்தி பெற்ற தொடர்மொழி. ஸரோருஹம் என்பது - குளத்தில் முளைப்ப தென்றும் (ஸரஸ் - நீர்நிலை), பங்கஜம் என்பது - சேற்றில் முளைப்ப தென்றும் (பங்கம் - சேறு), அம்போருஹம் என்பது - நீரில்முளைப்பதென்றும் (அம்பஸ்-ஜலம்) காரணப் பொருள்படும். இவை - இங்ஙனம் தோன்றும் பிறவற்றுக்கெல்லாம் காரணக்குறி யாகாது தாமரை யொன்றற்கே பெயராய் வழங்குதல் காரணவிடுகுறி. சீர் - ஸ்ரீ என்ற வடசொல்லின் சிதைவென்பர். ஆரணம் - தற்சமவடசொல்.

இச்செய்யுளில், ஒருபொருளையேகுறிக்கிற கமலம், தாமரை, சரோருகம், பங்கயம், அம்போருகம் என்ற பலசொற்கள் வந்தது, பொருட்பின் வருநிலையணி. (க)

உ. வணங்குஞ்சிலைநுதலுங்கழைத்தோளும்வனமுலைமேற்
சுணங்கும்புதியநிலவெழுமேனியுந்தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங்கண்களுநோக்கிப்பிரமனன்பா
லுணங்குந்திருமுன்றிலாய்மறைநான்குமுரைப்பவளே.

(இ - ள்.) மறை நான்கும் உரைப்பவளே - வேதங்கள்நான்கையும்உரைக்கின்ற தன்மையுடையவளே!—(உனது), வணங்கும் சிலை நுதலும் - வளைந்த வில்லைப்போன்ற நெற்றியையும், கழை தோளும் - இளமூங்கிலைப்போன்ற தோள்களையும், வனம் முலைமேல் சுணங்கும் - அழகிய தனங்களின்

மீது பரவிய தேமலையும், புதிய நிலவு எழும் மேனியும் - இளமையான சந்திரகாந்தி வீசுகின்ற [மிகவும்வெண்மையான] திருமேனிநிறத்தையும்,தோட்டுடனே பிணங்கும் கரு தட கண்களும் - காதணியோடு போர்செய்கின்ற [காதளவும்நீண்ட] கரிய விசாலமான கண்களையும், பிரமன் - (உனதுகணவனுன) பிரமதேவன், நோக்கி - பார்த்து, அன்பால் - அன்பினுல், உணங்கும் - வாடிக்கிடக்கும்படியான, திரு முன்றிலாய் - அழகிய முற்றத்தினையுடையாய், (நீ); (எ - று.)

நீ உனதுதலைவனுன பிரமதேவனிடத்து ஊடல்கொண்டபோது அவ்வூடலைத் தணித்துக் கூடப்பெருமல் அப்பிரமதேவன் உனது நெற்றி முதலிய அவயவங்களின் செவ்வியை நோக்கி வருந்திக்கிடக்கும் முற்றத்தினையுடையாய் நீயென்று அவளது மிக்கபெருமையை எடுத்துப் பாராட்டிக் கூறியவாறு. "ஊடுதல்காமத்திற்கின்ப மதற்கின்பங், கூடிமுயங்கப்பெறின்" என்னுந் திருக்குறளின்படி ஊடுதல் காமத்திற்கு இன்பந்தருவதாயினும், அவ்வூடலைத்தணித்துக் கூடி முயங்கப்பெருமையால், பிரமதேவன் வாடிநிற்ப னென்க.

மகளிர்தோள்களுக்கு இளமூங்கில், திரண்டுஉருண்டுநீண்ட வடிவிலும் செய்ப்பிலும் உவமையாம். சுணங்கு - காமவிகாரத்தா லுண்டாகும் நிறவேறுபாடு; பசலை, தேமல் எனப்படும். தோட்டுடனே பிணங்குங் கருந்தடங்கண்கள் - காதணியோடு போர்செய்யும்படியான [அதாவது - காதுவரையில் நீண்ட] கறுத்த விழிகளையுடைய பெரிய கண்க ளென்றவாறு. 'மறைநான்கு முரைப்பவள்' என்றது, வேதத்திற்கு அதிதேவதை யென்றபடி; வேதங்களை எப்போதும் ஓதுகின்ற பிரமதேவனது மனைவி யென்றுமாம். முன்றில் - வீட்டின் முன்னிடம்; இல் முன் என்பன முன்றில் என்று புணர்வது, இலக்கணப்போலி. (உ)

௩. உரைப்பாருரைக்குங்கலைகளெல்லாமெண்ணிலுன்னையன்றித்
தரைப்பாலொருவர்தரவலரோதண்டரளமுலை
வரைப்பாலமுதுதந்திங்கெனைவாழ்வித்தமாமயிலே
விரைப்பாசடைமலர்வெண்டாமரைப்பதிமெல்லியலே.

(இ - ள்.) தண் தரளம் வரை முலை பால் அமுது தந்து -குளிர்ச்சியான முத்துமாலைகளை யணிந்த மலைபோன்ற (உனது) தனங்களின் பாலாகிய அமிருதத்தைக் கொடுத்து, இங்கு - இவ்வுலகில், எனை-என்னை, வாழ்வித்த-நன்ருகப் பெருமையோடு வாழச்செய்த, மா மயிலே - (சாயலாற் பெருமையையுடைய மயில்போன்றவளே!—விரை - நறுமணத்தையுடைய, பாசு அடை - பசியஇலைகளோடுகூடிய, வெள் தாமரை மலர் பதி - வெண்டாமரைமலராகிய ஆசனத்தில் வாழ்கின்ற, மெல் இயலே - மெல்லியதன்மையுடையவளே!—எண்ணில் - ஆலோசித்துப் பார்த்தால், உரைப்பார் உரைக்கும் கலைகள் எல்லாம் - இவ்வுலகத்திலுள்ளார் சிறப்பித்துக்கூறுகின்ற எல்லாச்சாஸ்திரங்களையும், தரைப்பால்-இவ்வுலகத்தில், உன்னைஅன்றி ஒருவர்-உன்னையல்லாமற் பிறரொருவர், தர வலரோ - கொடுக்குந்தன்மையுடையராவரோ? [ஆகார் என்றபடி.]; (எ - று.)

நீயொருத்தியே எல்லாக்கலைகளையும் அடியார்கட்குக் கொடுக்குந் தன்மையுடையாய் என்பதாம். 'தண்டரளமுலை......மாமயிலே' என்றது, அடியேனுக்கு ஞானப்பாலூட்டினதனால் யாதொன்றையும்அறியாத அடியேனை இவனையன்றி உலகத்தில் வேறெவருமில்லை யென்னுமாறு வாழச்செய்தவளே யென்ற குறிப்பு. பசுமை + அடை=பாசடை; பண்புப்பெயர் ஈறுபோய் ஆதி நீண்டது. பதி - வாசஸ்தானம். (௩)

௪. இயலானதுகொண்டுநின்றிருநாமங்களேத்துதற்கு
முயலாமையாற்றடுமாறுகின்றேனிந்தமூவுலகுஞ்
செயலாலமைத்தகலைமகளேநின்றிருவருளுக்
கயலாவிடாமலடியேனையுமுவந்தாண்டருளே.

(இ - ள்.) இயலானது கொண்டு - கல்வியைக் கொண்டு, நின் திருநாமங்கள் ஏத்துதற்கு முயலாமையால் - உனது திருப்பெயர்களைத் துதித்தற்கு முயலாததனால், தடுமாறுகின்றேன் - நிலைகலங்குகிறேன்: இந்த மூஉலகும் செயலால் அமைத்த கலை மகளே - இந்த மூன்றுவகை யுலகங்களையும் தன்செயலாற் படைத்தருளிய சரசுவதியே! நின் திரு அருளுக்கு அயல் ஆ விடாமல் - உனது சிறந்த கருணைக்குப் புறம்பாக விட்டிடாமல், அடியேனையும் உவந்து ஆண்டுஅருள் - (உனக்கு) அடிமைப்பட்டவனாகிய என்னையும் (மற்றையடியார்களைப்போலவே) அன்புகொண்டு பாதுகாத்தருளுவாய்.

இந்த மூவுலகு - மேல் கீழ் நடு என்பன. சகலலோகங்களையும்படைத்த கடவுளான பிரமனது தொழிலை உபசாரமாக அவன்மனைவியின்மேலேற்றி 'இந்த மூவுலகுஞ் செயலா லமைத்த கலைமகளே' என்றார். அன்றியும், பிரமனது சத்திசொரூபமான இவள் அவனது படைப்புத் தொழிற்கு உதவியாதலுங் காண்க. இனி, உலகத்தவரெல்லோரையும் தனது நிகழ்ச்சியால் நடைபெறச்செய்த என்றுகூறலும் ஒன்று. கலைமகள் - கல்விக்கு உரிய மகள். இயலானதுகொண்டு என்பதற்கு - இயற்றமிழ்ப்பாடல்களினால் என்றும் பொருளுரைக்கலாம். இதில், 'ஆனது' என்றது - பகுதிப்பொருள்விகுதி; கொண்டு - மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. முயலாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். முயலுதல் - பிரயத்தனப்படுதல். அயலாஎன்பதில், 'ஆ' என்பது - ஆக என்பதன் விகாரம். அயல் - வெளிவிலக்கு. அடியேன்-அடிமையென்னும் பண்பினடியாப்பிறந்த தன்மையொருமைக்குறிப்புவினையாலணையும்பெயர்; உம்மை - எச்சப்பொருளோடு இழிவுசிறப்பு. நாமம் - வடசொல்.

௫. அருக்கோதயத்தினுஞ்சந்திரோதயமொத்தழகெறிக்குந்
திருக்கோலநாயகிசெந்தமிழ்ப்பாவைதிசைமுகத்தா
லிருக்கோதுநாதனுந்தானுமெப்போதுமினிதிருக்கு
மருக்கோலநாண்மலராளென்னையாளுமடமயிலே.

(இ - ள்.) அருக்க உதயத்தினும் சந்திர உதயம் ஒத்து அழகு எறிக்கும் - சூரியோதயத்தைக்காட்டிலும் மிகுதியாக விளங்குவதொரு சந்திரோதயத்தைப் போன்று அழகியஒளியை வீசுகிற, திரு கோலம் - திருமேனி

யையுடைய, நாயகி - தலைவியும், செம் தமிழ் பாவை - செவ்விய தமிழுக்கு உரிய தேவதையும், திசை முகத்தால் இருக்கு ஓதும் நாதனும் தானும் எப்போதும் இனிது இருக்கும் - நான்குதிக்கையும் நோக்கிய நான்குமுகங்களால் (நான்கு) வேதங்களையும் ஓதிக்கொண்டிருக்கிற தன்கணவனான பிரமதேவனும் தானுமாக எப்பொழுதும் கூடி இனிமையாக வீற்றிருக்கின்ற, மரு கோலம் நாள் மலராள்-வாசனையுள்ள அழகியஅன்றுமலர்ந்த தாமரைப்பூவில் வாழ்பவளுமான சரசுவதி, என்னை ஆளும் மட மயில் - என்னை அடிமை கொண்டு பாதுகாக்குந் தேவதையாவள்; (எ - று.)

மடமயில் - மடப்பமுள்ள மயில்; மடப்பம் - இளமைக்குணம். மயில் போன்ற சாயலுடையவளை 'மயில்' என்றது, உபசாரவழக்கு; உவமையாகு பெயர். சரசுவதியினது அழகிய திருமேனி வெண்ணிறமாய்ச் சூரியனொளியினும் மேலாகப் பிரகாசித்தல்பற்றி, 'அருக்கோதயத்தினுஞ் சந்திரோதயமொத்து அழகெறிக்குந் திருக்கோலம்' எனப்பட்டது. அருக்கோதயத்தின் என்றதில், ஐந்தனுருபு - எல்லைப்பொருளது; உம் - உயர்வுசிறப்பு. அர்க்கோதயம், சந்த்ரோதயம் - குணசந்திபெற்ற வடமொழித்தொடர்கள்; 'அ ஆமுன் உ ஊவரின் இரண்டும்கெட ஓர் ஓகாரம் தோன்றும்.' அருக்கனது உதயம், சந்திரனது உதயம் என ஆறும்வேற்றுமைத்தொகை. நாயகி-நாயகனென்பதன் பெண்பால். செந்தமிழ் - சுத்தமான தமிழ், கலப்பில்லாத தமிழ். இதற்கு மாறானது, கொடுந்தமிழ் எனப்படும். இருக்கு-ருக் என்ற வடசொல்லின் விகாரம்; இது, நான்குவேதங்களில் ஒன்றற்குச் சிறப்புப் பெயராவதோடு எல்லாவேதங்கட்கும் பொதுப்பெயராகவும் நிற்கும். நாள் மலர் - புதிய மலர். (ரு)

௬. மயிலேமடப்பிடியேகொடியேயிளமான்பிணையே
குயிலேபசுங்கிளியேயன்னமேமனக்கூரிருட்கோர்
வெயிலேநிலவெழுமேனிமின்னேயினிவேறுதவம்
பயிலேன்மகிழ்ந்துபணிவேனுனதுபொற்பாதங்களே.

(இ - ள்.) மயிலே - (சாயலில்) மயில் போன்றவளே! மடம் பிடியே - (நடையழகில்) இளமையான பெண்யானை போன்றவளே! கொடியே - (மெல்லியவடிவங்கொண்டு ஒல்கிஒசியுந்திறத்தில்) பூங்கொடிபோன்றவளே! இள மான் பிணையே-(பார்வையழகில்) இளமையான பெண்மான் போன்றவளே! குயிலே - (இனியகுரலில்) குயில்போன்றவளே! பசு கிளியே - (இனிமையாகக் கொஞ்சிப் பேசுதலில்) பச்சைக்கிளி போன்றவளே! அன்னமே - (நடையழகில்) அன்னப்பறவை போன்றவளே! மனம் கூர் இருட்கு ஓர் வெயிலே - (ஜனங்களுடைய) மனத்தின் மிக்க அஜ்ஞானமாகிய இருளைப் போக்குதற்கு ஒப்பற்றதொரு சூரியகாந்திபோன்றவளே! நிலவு எழு மேனி- சந்திரகாந்திபோன்ற வெள்ளொளி விளங்குகின்ற திருமேனியையுடைய, மின்னே-மின்னல்போலப் பிரகாசிப்பவளே! இனி வேறு தவம் பயிலேன் - இனி வேறு தவமெதனையும் செய்யமாட்டேன்: மகிழ்ந்து உனது பொன் பாதங்களே பணிவேன் - மகிழ்ச்சிகொண்டு உனது திருவடிகளையே வணங்குவேன்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - பிரிநிலை; மற்றவை - விளியுருபு.

மயில் முதலியன - உவமையாகுபெயர். பிடி - யானையின் பெண்மைப் பெயர்; இதன் ஆண்பால்-களிறு. பிணை-மானின் பெண்மைப்பெயர்; இதன் ஆண்பால் - கலை. கூர் - உரிச்சொல். புறவிருளை நீக்குகின்ற வெயிலினும் அகவிருளைநீக்குகின்ற இதற்கு உள்ள சிறப்பு விளங்க "ஓர்வெயில்" என்றார். நிலவு - நிலா என்பதன் விகாரம். பொன் - அழகு. பொற்பாதம் - பொன் போலச் சிறந்த பாதமுமாம்; பொன்னணியணிந்த பாதமெனினுமாம்; இப் பொருளில், பொன் - கருவியாகுபெயர். மயில் - மயூரம், அன்னம் - ஹம்ஸம்; வடசொற் சிதைவுகள். (சு)

எ. பாதாம்புயத்திற்பணிவார்தமக்குப்பலகலையும்
வேதாந்தமுத்தியுந்தந்தருள்பாரதிவெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்திலிருப்பாளிருப்பவென்சிந்தையுள்ளே
யேதாம்புவியிற்பெறலரிதாவதெனக்கினியே.

(இ - ள்.) பாத அம்புயத்தில் பணிவார்தமக்கு - (தனது) திருவடித் தாமரைகளில் விழுந்து வணங்குபவர்களுக்கு, பல கலையும்-பலவகைச்சாஸ் திரங்களையும், வேதாந்த முத்தியும் - வேதாந்தத்திற் கூறப்படுகிற மோக்ஷத் தையும், தந்து அருள் - கொடுத்தருள்கிற, பாரதி-பாரதியென்னும் ஒருதிரு நாமமுள்ளவளும், வெள் இதழ் - வெண்ணிறமான இதழ்களையுடைய, பூ - அழகிய, சீத அம்புயத்தில் - குளிர்ந்த தாமரைமலரில், இருப்பாள் - வீற்றி ருப்பவளுமான சரசுவதி, என் சிந்தையுள்ளே இருப்ப - எனது மனத்திலே வீற்றிருத்தலால், இனி எனக்கு புவியில் பெறல் அரிது ஆவது ஏது ஆம் - இனிமேல் எனக்கு உலகத்தில் பெறுதற்கு அரியதாகும் பொருள் யாதா கும் ? [யாதுமில்லை யென்றபடி] ; (எ - று.)

யான் சரசுவதியை இடைவிடாது தியானித்து அவளுடையமாறுக்கரு ணையைப்பெற்றேனாதலால், இனி எனக்கு எல்லாப்பேறுகளும் எளிதிற் கைகூடு மென்பதாம். பாதாம்புஜம், வேதாந்தம், சீதாம்புஜம் - தீர்க்கசந்தி பெற்ற வடமொழித்தொடர்கள். அம்புஜம் - நீரில்தோன்றுவது: அம்பு - நீர். வேதாந்தம் என்பது - வேத அந்தம் எனப்பிரிந்து, வேதத்தின் ஈற்றுப்பகு தியும் தேர்ந்தகருத்துமாகிய உபநிஷத்துக்களைக் குறிக்கும். பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என வேதம் இரண்டாகப் பகுக்கப்பட்டு, அவற்றில் யாகாதி கிரியைகளைக் கூறுகிற முந்தினபாகம் கருமகாண்டம் என்றும், கடவுளைப் பற்றிக் கூறுகிற பிந்தியபாகம் ஞானகாண்டம் அல்லது பிரமகாண்டம் என் றும் கூறப்படும். முக்தி என்ற வடசொல் - எல்லாப்பற்றுக்களையும் விட்டு அடையுமிடம் என்றும், பாரதீ என்ற வடசொல் - எல்லாவற்றையும் பரிப்ப வள் என்றும் [பரித்தல் - நிர்வகித்து நடத்தல்] காரணப்பொருள்படும். புவி- வடசொல். (எ)

அ. இனிநானுணர்வதெண்ணெண்கலையாளையிலகுதொண்டைக்
கனிநாணுஞ்செவ்விதழ்வெண்ணிறத்தாளைக்கமலவயன்
றனிநாயகியையகிலாண்டமும்பெற்றதாயைமணப்
பனிநாண்மலருறைபூவையையாரணப்பாவையையே.

(இ - ள்.) இனி நான் உணர்வது - இனிமேல் யான் தியானிப்பது,— எண் எண் கலையாளை - அறுபத்துநான்கு கலைஞானங்கட்கும் உரியவளும், இலகு தொண்டை கனி நாணும் செம் இதழ் - விளங்குகின்ற கொவ்வைப் பழம் (ஒப்பாகமாட்டாது) வெள்குதற்குக் காரணமான சிவந்தவாயிதழையும், வெள் நிறத்தாளை - வெண்மையான திருமேனி நிறத்தையும் உடையவளும், கமலம் அயன் தனி நாயகியை - தாமரைமலரில்வாழ்கிற பிரமனுடைய ஒப்பற்ற மனைவியும், அகில அண்டமும் பெற்ற தாயை - எல்லாஅண்டகோளங்களையும் பெற்ற தாயும், மணம் பனி நாள் மலர் உறை - வாசனையையுடைய குளிர்ந்த அன்றுபூத்த தாமரைப்பூவில் வீற்றிருக்கிற, பூவையை - கிளிபோன்றவளும், ஆரணம் பாவையை - வேதங்கட்கு உரிய அதிதேவதையுமான சரசுவதியையேயாம்; (எ - று.)

எண்ணெண்கலை-பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். தொண்டை-ஓர்கொடி. தொண்டைக்கனி நாணுஞ் செவ்விதழ் - கொவ்வைக்கனியினும் மிகச் சிறந்த இதழ் என்றபடி. நாணும் இதழ் - பெயரெச்சம் காரியப்பொருளது; 'நோய்தீரும்மருந்து' என்றவிடத்திற்போல.'செவ்விதழ் வெண்ணிறத்தாள்' என்றவிடத்து முரண்தொடை இருத்தல் காண்க. அஜன் என்றவடசொல், அயன் என விகாரப்பட்டது; திருமாலினிடத்துத் தோன்றியவனென்று பொருள்படும்; அ-விஷ்ணு. பூவை, பாவை-உவமையாகுபெயர்கள். (அ)

கூ. பாவும்தொடையும்பதங்களுஞ்சீரும்பலவிதமா
மேவுங்கலைகள்விதிப்பாளிடம்விதியின்முதிய
நாவும்பகர்ந்ததொல்வேதங்கணான்குநறுங்கமலப்
பூவுந்திருப்பதம்பூவாலணிபவர்புந்தியுமே.

(இ - ள்.) பாவும் - பாடல்களும், தொடையும் - தொடைகளும், பதங்களும் - சொற்களும், சீரும் - சீர்களும், பல விதம் ஆ மேவும் - பலவகையாக அமையப்பெற்ற, கலைகள் - நூல்களை, விதிப்பாள் - நிர்வகிப்பவளான சரசுவதிக்கு, இடம் - இருப்பிடங்களாவன,—முதிய விதியின் நாவும் - (எல்லாப்பிராணிகளுக்கும்) மூதாதையான பிர்மனுடைய நாக்கும், பகர்ந்த தொல் வேதங்கள் நான்கும்-(அவனாற்) சொல்லப்பட்ட பழமையான நான்கு வேதங்களும், நறு கமலம் பூவும் - வாசனையையுடைய வெண்டாமரைமலரும், திரு பதம் பூவால் அணிபவர் புந்தியுமே - தனது திருவடிகளை மலர்களைக் கொண்டு இட்டு அருச்சிக்கின்ற அடியார்களுடைய மனமுமே யாம். (எ-று.)

பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலியன. துறை, தாழிசை, விருத்தம் என மூன்று வகையான இவற்றினினங்களும், பாஎன்றதில் அடங்கும். தொடை - எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது. அது, எதுகை மோனை முரண் முதலாகப் பலவாம். பதங்கள் - பகுபதமும், பகாப்பதமும்; பெயர் வினை முதலிய சொற்களெனினுமாம். சீர் - ஓரசைச்சீர் முதலியன. இவற்றின் தன்மையை, இலக்கணநூல்களிற் காண்க. தொடையும், சீரும்-பாவின்உறுப்பு. கலைகள்விதிப்பாள் - கல்வித்தெய்வ மென்றபடி. விதி படைத்தற் கடவுள். அவன் பிதாமகன் எனப்படுகின்ற முதன்

மை தோன்ற, 'முதியவிதி' என்றார். தொல் வேதம் - பண்புத்தொகை. வேதம் - ஒருவராலும் ஆக்கப்படாமல் கடவுள்போல நித்தியமாக வுள்ளதென்பது தோன்ற, 'தொல்வேதம்' எனப்பட்டது. இதனை ஆதியில் திருமால் பிரமனுக்கும், பின்பு பிரமன் மற்றையோர்க்கும் வெளியிட்டுக் கூறினரேயன்றி, யாரும் இதனைச் செய்தவரல்லரென அறிக. இதுபற்றி, வேதத்துக்கு 'செய்யாமொழி' என ஒருபெயர் வழங்கும். வேதம் என்ற வடசொல் - நன்மைதீமைகளை விதிவிலக்குக்களால் அறிவிப்ப தென்று பொருள்படும்; வித் - அறிவித்தல். வேதங்கள் நான்கு - ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன. புந்தி - புத்தி என்ற வடசொல்லின் விகாரம். (கூ)

கo. புந்தியிற்கூரிருணீக்கும்புதியமதியமென்கோ
வந்தியிற்றோன்றியதீபமென்கோநல்லருமறையோர்
சந்தியிற்றோன்றுந்தபனனென்கோமணித்தாமமென்கோ
வுந்தியிற்றோன்றும்பிரான்புயந்தோயுமொருத்தியையே.

(இ - ள்.) உந்தியில் தோன்றும் பிரான் புயம் தோயும் ஒருத்தியை - (திருமாலினது) நாபித்தாமரையினின்று தோன்றிய கடவுளான பிரமதேவனுடைய தோள்களைத் தழுவுகிற சரசுவதியாகிய ஒருத்தியை,-புந்தியில் கூர் இருள் நீக்கும் புதியமதியம் என்கோ - (ஜனங்களுடைய) மனத்தின் மிக்க அஜ்ஞானமாகிய இருளைப் போக்குகிற புதியசந்திரனென்றுசொல்வேனோ! அந்தியில் தோன்றிய தீபம் என்கோ - மாலைப்பொழுதில்ஏற்றப்பட்டுவிளங்குவதான விளக்கென்று சொல்வேனோ! நல் அரு மறையோர் சந்தியில் தோன்றும் தபனன் என்கோ - சிறந்த அருமையான வேதங்கட்கு உரியவரான பிராமணர்கள் நமஸ்காரஞ்செய்கிற காலைச்சந்தியிலே உதித்துவிளங்குகிற சூரியனென்று சொல்வேனோ! மணி தாமம் என்கோ - இரத்தினஹாரமென்று சொல்வேனோ! (எ - று.)

மிகப்பிரகாசிக்கிற சரசுவதியினது திவ்வியசொரூபம் சந்திர சூரிய அக்கினியர் என்னும் முச்சுடராகவும், இரத்தினமாலையாகவும் விகற்பிக்கலாம்படியுள்ள தென்பது, தேர்ந்த கருத்து.

புறவிருளை நீக்குகின்ற சந்திரனினும் இதற்குஉள்ள மேம்பாடு விளங்க, 'புதிய மதியம்' என்றார். மதியம், அம்-சாரியை. ஸந்த்யா என்ற வடசொல். அந்தி என்றும், சந்தி என்றும் விகாரப்பட்டது. பகலொடு இரவு சேருஞ் சமயத்தையும், இரவொடு பகல் சேருஞ்சமயத்தையும் உணர்த்தும் இப்பொதுப்பெயர் - இங்குச் சிறப்பாய் முறையே மாலைச்சந்தியையும், காலைச்சந்தியையும் குறித்தது. என்கோ - என்கு ஓ எனப் பிரிக்க. என்கு - என்பேன்; என் - இடைச்சொற் பகுதி, கு-தன்மையொருமை விகுதி; [நன்-வினை-அ.] இதுவே எதிர்கால முணர்த்தும்; [நன் - பத - கஅ.] இனி, 'என்கவோ' என்பது, 'என்கோ' என விகாரப்பட்ட தென்றலு மொன்று: என்பேனாகவோ என்று பொருள்; வியங்கோள்முற்று, தன்மையொருமைக்கு வந்த தென்க. தீபம், தபநன், தாமம், புஜம் - வடசொற்கள். (கo)

கக. ஒருத்தியையொன்றுமிலாவென்மனத்தினுவந்துதன்னை
யிருத்தியைவெண்கமலத்திருப்பாளையெண்ணெண்கலைதோய்
கருத்தியையைம்புலனுங்கலங்காமற்கருத்தையெல்லாந்
திருத்தியையான்மறவேன்றிசைநான்முகன்றேவியையே.

(இ - ள்.) ஒருத்தியை - ஒப்பற்றவளும், ஒன்றும் இலா என் மனத்தின் உவந்து தன்னை இருத்தியை-யாதொருநற்சிந்தனையு மில்லாத எனது மனத்திலே மகிழ்ச்சிகொண்டு தன்னை வீற்றிருக்கச்செய்தவளும், வெள் கமலத்து இருப்பாளை - வெண்டாமரைமலரில் வீற்றிருப்பவளும், எண் எண் கலை தோய் கருத்தியை - அறுபத்துநான்கு கலைஞானமும் நிறைந்த மனத்தையுடையவளும், ஐம்புலனும் கலங்காமல் கருத்தை எல்லாம் திருத்தியை - (தன் அடியார்களுடைய) பஞ்ச இந்திரியங்களும் நிலைகலங்காதபடி (அவர்களுடைய) மனத்தை யெல்லாம் திருந்தச்செய்பவளும், திசை நால் முகன் தேவியை - நான்குதிசையையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவனான பிரமனது மனைவியுமான சரசுவதியை, யான் மறவேன் - நான் (ஒருகாலும்) மறக்கமாட்டேன் [இடைவிடாமல் எப்பொழுதும் தியானிப்பேன்என்றபடி].

ஒருத்தி-ஒன்று என்பதன் அடியாகப் பிறந்த பெண்பாற்பெயர்; இதன் ஆண்பால் - ஒருத்தன், ஒருவன்; இதில், த - சாரியை. 'ஒன்றுமிலா என் மனத்தின் உவந்து தன்னை இருத்தி'—அடியவர்க் கெளியளாய் அவர்மனத்தில் வந்து வீற்றிருக்கும் பேரருளுடையவ ளென்றபடி. ஒன்று - எண்ணலளவாகுபெயர்; உம் - இழிவுசிறப்பு. இருத்தி, இரு என்பதன் பிறவினையான இருத்து - பகுதி. திருத்தி, திருந்துஎன்பதன் பிறவினையான திருத்து - பகுதி: இரண்டிலும், இ - கருத்தாப்பொருள்விகுதி. எண்ணெண் கலை - பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். கருத்தி; இ பெயர்விகுதி. இங்கே, பொறி, புலன் எனப்பட்டது; ஐம்பொறி-மெய் வாய் கண் மூக்குச் செவி. அவை நிலைகலங்குதலாவது - தீநெறியால் ஐம்புலன்களிற்செல்லல். ஐம்புலனும், உம்மை-முற்றுப்பொருளது. மனத்தின், இன்-ஏழனுருபு. (கக)

சஉ. தேவருந்தெய்வப்பெருமானுநான்மறைசெப்புகின்ற
மூவருந்தானவராகியுள்ளோருமுனிவரரும்
யாவருமேனையவெல்லாவுயிருமிதழ்வெளுத்த
பூவருமாதினருள்கொண்டுஞானம்புரிகின்றதே.

(இ -ள்.) தேவரும் - தேவர்களும், தெய்வம் பெருமானும் - அத்தேவர்கட்குத்தலைவனாகிய இந்திரனும், நால் மறை செப்புகின்ற மூவரும் - நான்கு வேதங்களிளுலுஞ் சொல்லப்படுகிற (அயன் அரி அறன் என்னுந்) திரிமூர்த்திகளும், தானவர் ஆகி உள்ளோரும் - அசுரர்களாயுள்ளவர்களும், முனி வரரும் - இருஷிசிரேஷ்டர்களும், யாவரும் - (மற்றும் உயர்திணையின் பாற்பட்ட) அனைவரும், ஏனைய எல்லா உயிரும் - மற்றை [அஃறிணையாகவுள்ள] எல்லாவுயிர்களும், ஞானம் புரிகின்றது - அறிவுகொண்டிருத்தல், இதழ் வெளுத்த பூ வரு மாதின் அருள் கொண்டே - வெண்ணிறமான

இதழ்களையுடைய தாமரைமலரில் வாழ்கிற சரசுவதியினுடைய கருணையினு லேயாம்; (எ - று.)

உயர்திணையும் அஃறிணையுமாகிய எல்லாவுயிர்களும் கொள்ளும் இயற்கையறிவுக்கும் செயற்கையறிவுக்கும் சரசுவதியின் அருளே காரண மென்பது கருத்து. மூவர் - தொகைக்குறிப்பு. தாநவர் - (காசியபமுனிவரது மனைவியருள்) தநு என்பவளது புதல்வர்; வடமொழித் தத்திதாந்தநாமம். முநிவரர் - வடமொழித் தொடர். ஏனைய - ஏனை யென்னும் இடைச்சொல்லடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். வெளுத்தஎன்பதில், வெண்மையென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினைத்தன்மையடைந்த வெளு என்பது - பகுதி. அடைமொழிகொடாமல் 'பூ' என்ருல், அது - எல்லாமலர்களிலும் சிறந்ததாகிய தாமரையைக் குறிக்கும். மாது - விரும்பப்படும் அழகுடைய பெண். புரிகின்றது - நிகழ்காலத் தொழிற்பெயர். (கஉ)

கரு. புரிகின்றசிந்தையினூடேபுகுந்துபுகுந்திருளை
யரிகின்றதாய்கின்றவெல்லாவறிவினரும்பொருளைத்
தெரிகின்றவின்பங்கனிந்தூறிநெஞ்சந்தெளிந்துமுற்ற
விரிகின்றதெண்ணெண்கலைமாதுணர்த்தியவேதமுமே.

(இ - ள்.) புரிகின்ற சிந்தையினூடே - (தன்னை) விரும்பிப் பயில்கின்றவர்களுடைய மனத்தினுள்ளே, புகுந்து புகுந்து - (அவர்கள் பயிலப் பயில) நன்ருகச் சென்று ஊன்றி, இருளை அரிகின்றது-(அவர்கள் மனத்திலுள்ள அஜ்ஞாநமாகிய) அகவிருளை அழிக்கின்றதும்,—ஆய்கின்ற எல்லா அறிவின் அரு பொருளை தெரிகின்ற இன்பம் கனிந்துஊறி-(நுட்பமாக) ஆராய்கிற எல்லாருடைய அறிவினுலும் அருமையான தத்துவப்பொருளை அறிந்து அதனுல் (அவரவர்) அடைகிற ஆனந்தம் முதிர்ந்து ஊறப்பெற்று, நெஞ்சம் தெளிந்து முற்ற - (அவர்களுடைய) மனம் தெளிவடைந்து முதிரும்படி, விரிகின்றது - (அம்மனத்திற்) பரவுகின்றதும்,—எண் எண் கலை மாது உணர்த்தியவேதமே - அறுபத்துநான்குகலைகளுக்கும் உரிய மகளான சரசுவதியினுற் சொல்லப்பட்ட வேதமேயாம்; (எ - று.)—வேதமும் என்ற உம்மை - அசைநிலை.

'புரிகின்ற சிந்தையினூடே புகுந்து புகுந் திருளை அரிகின்றது' என்றது - பொதுப்பட வேதம்தன்னை யோதி உணர்வாரது அறியாமையைப் போக்கி அவர்க்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துந் தன்மையை விளக்கும். 'ஆய்கின்ற......விரிகின்றது' என்றதனுல், நுட்பமாக வேதாந்தத்தைஆராய்பவர் உண்மைப்பொருளையுணர்ந்து அதனுல் ஆனந்தமடைந்து மனந்தெளிந்து மேன்மையடையுந்திறம் விளக்கப்பட்டது. வேதம், வித்யாரூபமாதலால், 'கலைமாதுணர்த்திய வேதம்' எனப்பட்டது. சிந்தையினூடு, ஊடு - ஏழனுருபு, இன் - சாரியை. புகுந்து புகுந்து, அடுக்கு - இடைவிடாமைப் பொருளது. அரிதல் என்னும் வினையின் ஆற்றலால், இருளின் திணிமை விளங்கும். நெஞ்சம், அம் - சாரியை. (கரு)

கச. வேதமும்வேதத்தினந்தமுமந்தத்தின்மெய்ப்பொருளாம்
பேதமும்பேதத்தின்மார்க்கமுமார்க்கப்பிணக்கறுக்கும்
போதமும்போதவுருவாகியெங்கும்பொதிந்தவிந்து
நாதமுநாதவண்டார்க்கும்வெண்டாமரைநாயகியே.

(இ - ள்.) நாதம் வண்டு ஆர்க்கும் வெள் தாமரைநாயகி - இனிய ஓசையையுடைய [ரீங்காரஞ்செய்யுந்தன்மையுள்ள] வண்டுகள் ஒலிக்கப்பெற்ற வெண்டாமரைமலரில் வீற்றிருக்கின்ற தலைவியானவள்,—வேதமும் - எல்லாவேதங்களும், வேதத்தின் அந்தமும் - அந்த வேதங்களின் அந்தங்களும் [உபநிஷத்துக்களும்], அந்தத்தின் மெய் பொருள் ஆம் பேதமும் - அந்தஉபநிஷத்துக்களிற்கூறப்பட்டுள்ள உண்மையான பொருள்களாகிய கடவுளரின் பேதங்களும், பேதத்தின் மார்க்கமும் - அந்தந்தக்கடவுளரைப்பற்றிய பலவகைச்சமயங்களின்வழிகளும், மார்க்கம் பிணக்கு அறுக்கும் போதமும் - (பற்பலவகைப்பட்ட) அந்தச்சமயவழிகளின் மாறுபாட்டை யொழித்து உண்மையை வெளிப்படுத்தும் நல்லறிவும், போதம் உரு ஆகி எங்கும் பொதிந்த விந்துநாதமும் - ஞானசொரூபமாகி எல்லாவிடங்களிலும் மறைந்துறைகின்ற விந்துநாதமும், (ஆவள்); (எ - று.)—வினைமுற்று வருவித்து உரைக்கப்பட்டது.

சரசுவதியானவள் வேதம் வேதாந்தம் கடவுளின்மூர்த்திபேதம் பலவகைச்சமயம் உண்மையறிவு விந்துநாதம் ஆகிய எல்லாப்பொருள்களாகவும் பரிணமித்திருப்பளென்பது கருத்து. வேதத்தின்பிரிவு இரண்டனுள் யாகாதி கிரியைகளைக் கூறுகிற பூர்வபாகத்தைக் கர்மகாண்டமென்றும், பகவானைக்குறித்துக் கூறுவதும் வேதத்தின் தேர்ந்த கருத்துமான உத்தரபாகத்தை உபநிஷத் என்றும் வேதாந்தமென்றும் பிரமகாண்டமென்றும் கூறுவர். கடவுளரின் பேதமாவது - வேதாந்தத்திற்கூறப்பட்ட பிரமன் விஷ்ணு சிவன் முதலிய மூர்த்திபேதங்கள். மார்க்கப்பிணக்கறுக்கும் போதமாவது - அக்கடவுளரைப்பற்றிய பலவகைச்சமயங்களிலும் சற்சமயம் இதுவென்று துணிந்து உண்மையறியும் தத்துவஞானம். விந்து - தாது, நாதம் - இந்திரியம்; என்றது, எல்லாப்பொருள்கட்கும் காரணமாகியும் காரியமாகியும் நிற்பவளென்றபடி. (கச)

கரு. நாயகமானமலரகமாவதுஞானவின்பச்
சேயகமானமலரகமாவதுந்தீவினையா
லேயகமாறிவிடுமகமாவதுமெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந்தாதார்சுவேதசரோருகமே.

(இ - ள்.) நாயகம் ஆன மலர் அகம் ஆவதும் - (சரசுவதிவீற்றிருக்கும் பெருமையுடைமையால் எல்லாமலர்களுள்ளும்) தலைமையாகிய மலராகப் பெறுவதும், ஞானம் இன்பம் சேய் அகம் ஆன மலர் அகம் ஆவதும் - ஞானநலங்கனிதலாகிய குழந்தை வளருமிடமான மலராகப்பெறுவதும், தீவினையால் ஏய் அகம் மாறிவிடும் அகம் ஆவதும் - (முற்பிறப்பிற்செய்த) பாவத்தினலுண்டாகிய செருக்கு நீங்குதற்குஉரிய இடமாகப்பெறுவதும், எ உயிர்

க்கும் தாய் அகம் ஆவதும் - எல்லாவுயிர்கட்கும் தாய்வீடாகப்பெறுவதும், (யாதெனின்),—தாது ஆர் சுவேத சரோருகம்-(சரசுவதிவசிக்கின்ற) மகரந்தப்பொடிகள் நிறைந்துள்ள வெண்டாமரைமலரேயாம்; (எ - று.)

சரசுவதி வீற்றிருக்கப்பெற்ற பேறு கிடைத்தலால் 'நாயகமான மலரகமாவது' என்றும், பேரின்பத்திற்குக்காரணமான கல்விக்குஉரிய மகள் இருத்தலால் 'ஞானவின்பச்சேயகமான மலரகமாவது' என்றும், தன்னைத் தியானித்தவர்க்கு முற்பிறப்பின் தீவினையைநீக்கிப் பரிசுத்தராக்குந் தன்மையுடைமையால் 'தீவினையாலேயகமாறிவிடுமகமாவது' என்றும், எல்லாவுயிர்களையும் படைக்குங் கடவுளான பிரமதேவனது மனைவியாதல்பற்றித் தாயானசரசுவதிக்கு இருப்பிடமாதலால் 'எவ்வுயிர்க்குந்தாயகமாவது' என்றும் வெண்டாமரைமலரைச் சிறப்பித்துக்கூறினர். (கரு)

கசு. சரோருகமேதிருக்கோயிலுங்கைகளுந்தாளிணையு
முரோருகமுந்திருவல்குலுநாபியுமோங்கிருள்போற்
சிரோருகஞ்சூழ்ந்தவதனமுநாட்டமுஞ்சேயிதழு
மொரோருகமீரரைமாத்திரையானவுரைமகட்கே.

(இ - ள்.) ஓர் ஓர் உகம் ஈர் அரை மாத்திரை ஆன உரைமகட்கு - ஒவ்வொருயுகமும் ஒருமாத்திரைப் பொழுதாகப்பெற்ற கல்வித்தெய்வமாகிய சரசுவதிதேவிக்கு,—திரு கோயிலும் - அழகிய இருப்பிடமும், கைகளும்—, தாள் இணையும் - இரண்டு திருவடிகளும், உரோருகமும் - தனங்களும், திரு அல்குலும்—, நாபியும் - கொப்பூழும், ஓங்கு இருள் போல் சிரோருகம் சூழ்ந்த வதனமும் - மிக்கஇருளைப்போன்ற [மிகக்கறுத்த] கூந்தல் சூழப்பெற்ற திருமுகமும், நாட்டமும் - திருக்கண்களும், சேய் இதழும் - சிவந்த அதரமும், (ஆகிய இவ்வுறுப்புக்கள்), சரோருகமே - செந்தாமரைமலர்களேயாம்; (எ - று.)

சரசுவதியின் எல்லாஅவயவங்களும் தாமரைமலர்போன்றன வென்பதாம். உரோருஹம் - மார்பில் முளைத்துள்ளது; சிரோருஹம்-தலையில்முளைத்துள்ளது; வடமொழிக்காரணப்பெயர்கள். யுகங்கள் நான்கு - கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. இந்தச்சதுர்யுகம் ஆயிரங் கழிந்தால் பிரமனுக்கு ஒருபகலாம்; பின்னும் ஓராயிரங் கழிந்தால் ஓர்இரவாம். மாத்திரை - கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒன்று கொண்டது. மிகப்பெரிய காலவளவாகிய யுகமொன்றுதானே பிரமனுக்கு மிகச்சிறியபொழுதாகுமென அவனது ஆயுளின் பெருக்கங் கூறியவாறு. சரசுவதி அந்தப்பிரமதேவனது மனைவியாய் அவனைவிட்டுப்பிரியாமல் எப்பொழுதும் அவனுடன் உறைபவளாதலால், அவளது ஆயுளும் அவ்வாறே பெருக்கமுடையதாகுமென ஈற்றடியால் விளக்கப்பட்டது. (கசு)

கஎ. கருந்தாமரைமலர்கட்டாமரைமலர் காமருதா
ளருந்தாமரைமலர்செந்தாமரைமல ராலயமாத்
தருந்தாமரைமலர்வெண்டாமரைமலர் தாவிலெழிற்
பெருந்தாமரைமணக்குங்கலைக்கூட்டப்பிணை தனக்கே.

(இ - ள்.) தா இல் எழில் குற்றமில்லாத அழகையுடைய, பெரு தாமரை மணக்கும் - சிறந்த தாமரைமலரிற் பொருந்தி வசிக்கின்ற, கலை கூட்டம் பிணை தனக்கு - கலைஞானங்களின் தொகுதிக்கு உரியவளான பெண்மான் போன்ற சரசுவதிக்கு,—கண் தாமரை மலர் கரு தாமரைமலர் - கண்களாகிய தாமரைமலர்கள் கருநெய்தல்மலர்போலும்; காமரு தாள் அரு தாமரை மலர் - (யாவராலும்) விரும்பப்படுகிற [அழகிய] திருவடிகளாகிய அருமையான தாமரைமலர்கள், செம் தாமரை மலர் - செந்தாமரைமலர்போலும்; ஆலயம் ஆ தரும் தாமரை மலர் - எழுந்தருளியிருக்கு மிடமாக அமைந்த தாமரை மலர், வெள் தாமரை மலர் - வெண்டாமரைமலராம்; (எ - று.)

கவி, சமத்காரமாக, கருந்தாமரை செந்தாமரை வெண்டாமரை என்ற மூன்றுவகைத் தாமரைமலரையும் கலைமகளோடு இயைபுபடுத்தி யுரைத்தார். கருநெய்தல் கருந்தாமரை யெனப்படுதலை, அதற்கு வடமொழியில் வழங்கும் 'நீலாம்புஜம்' என்ற பெயரினாலும் அறிக. மகளிர்கண்ணுக்குக் கருநெய்தல்மல ருவமை-கருமை மென்மை அழகுகளுக்கு. 'கண்டாமரைமலர்' என்ற பாடம் இலக்கணத்துக்கு ஒத்தது; "ணனவல்லினம் வரட் டறவும்" என்ற சூத்திரத்து "அல்வழிக்கு அனைத்துமெய் வரினு மியல்பாகும்மே" என்றது காண்க. பெரியோருடைய பாதத்தை 'திருவடித்தாமரை' என்றும், அவர்களுடைய கையை 'கைத்தாமரை' என்றும் இவ்வாறு உபசாரமாகக் கூறுந்தகுதி பற்றி 'கண்தாமரைமலர்', 'தாள் தாமரைமலர்' என்றார். காமரு என்பது - காமம் மருவு என்பதன் விகாரம். ஆலயம் - வடசொல். ஆ - விகாரம். தா - உரிச்சொல். மணத்தல் - கூடுதல். 'பெருந்தாமரை மணக்கும்' என்பதற்கு - சிறந்த தாமரை மணம் வீசுகின்ற என்று பொருள் கொள்ளினுமாம்; தாமரை மலரில் எப்பொழுதும் வசித்தலும், பதுமினி யென்னும் உத்தமசாதிமாதரின்மேனி தாமரைமணம்வீசுமென்ற நூற்கொள்கையும், இங்ஙனங் கூறுதற்குக் காரணங்களாம். இனி, தாமரைமலர் மணம்வீசுதற்குக் காரணமான என்றலு மொன்று, இவளுடைய திருமேனியின் ஸ்பர்சத்தால் தாமரை மலர் மணம்வீசுமென இவளுடைய திவ்வியகந்தத்தின் சிறப்பை யுணர்த்தியபடி. அன்றி, பெருந்தாமர் - பரந்தாமர்; சிறந்தசோதியையுடைய கடவுள்; இங்கே பிரமதேவர். அவரை, மணக்கும்-மணஞ் செய்துகொண்ட என்று உரைக்கவும் இடமுண்டு. பிணை உவமையாகுபெயர்; கண்ணோக்கில் உவமம். சொற்பொருட் பின்வருநிலையணி. நான்காமடியில், மானின் பரியாய நாமமாகிய மரை கலை பிணை என்ற சொற்கள் அமையவைத்தது, ஒருவகைக் கவிசாதுரியம். (கஎ)

கஅ. தனக்கேதுணிபொருளென்னுந்தொல்வேதஞ் சதுர்முகத்தோ
னெனக்கேசமைந்தவபிடேகமென்னு மிமையவர்தா
மனக்கேதமாற்றுமருந்தென்ப சூடுமலரென்பன்யான்
கனக்கேசபந்திக்கலைமங்கைபாதகமலங்களே.

(இ - ள்.) கனம் - மேகம்போன்ற, கேசம் பந்தி கூந்தற்பாரத்தையுடைய, கலை மங்கை-கல்விமகளான சரசுவதியினுடைய, பாதம் கமலங்கள்- திருவடித்தாமரைமலர்களை,—தொல் வேதம்-அநாதியான வேதம், தனக்கே

துணி பொருள் என்னும் - தனக்கே உரியதென்று நிச்சயிக்கப்பட்ட பொருள் என்று சொல்லும்; சதுர் முகத்தோன்-நான்குமுகத்தவனான பிரமன், எனக்கே சமைந்த அபிடேகம் என்னும்-எனக்கே உரியதாகஅமைந்த கிரீடமென்று சொல்வான்; இமையவர் தாம்-மற்றைத்தேவர்கள் தாங்கள், மனம் கேதம் மாற்றும் மருந்து என்ப - (தங்கள்) மனத்திலுள்ள (அறியாமையாகிய) நோயைத் தீர்க்கும் மருந்து என்று சொல்வார்கள்; சூடும் மலர் என்பன் யான்-யான் தலையின்மேற் சூடும் பூவென்று சொல்வேன்; (எ - று.)

இது, பலபடப்புனைவணி; வடநூலார் உல்லேகாலங்காரம் என்பர். ஒருபொருளைப் பலர் பலதன்மைகளினாலே பலபொருளாகச் சொல்லுதல், இதன் இலக்கணம். தனக்கே, எனக்கே, ஏ-பிரிநிலை. அபிஷேகம்-வடசொல். "சில்லரிக் கிண்கிணி மென்தெய்வமலர்ச் சீறடியைத், தொல்லை மணிமுடி மேற்சூட்டினான்" என்றபடி ஊடல்தணிக்குங்காலத்துக் கணவன் மனைவியின் பாதத்தை முடிமேற் கொள்வதோர் இயைபுபற்றி, பிரமன் அதனை அபிஷேகமென்பானாயினான். மநஃ கேதம் - வடமொழித்தொடர். கேதம் - துன்பம். என்ப - பலர்பால் முற்று; என் - இடைச்சொற் பகுதி, ப - விகுதி; இதுவே எதிர்காலங் காட்டும். கநம், கேசபங்க்தி என்ற வடசொற்றொடர்கள் விகாரப் பட்டன. கேசபந்தி - மயிரொழுங்கு. (கஅ)

கசூ. கமலந்தனிலிருப்பாள்விருப்போடங்கரங்குவித்துக்
கமலங்கடவுளர்போற்றுமென்பூவைகண்ணிற்கருணைக்
கமலந்தனைக்கொண்டுகண்டொருகாற்றங்கருத்துள்வைப்பார்
கமலங்கழிக்குங்கலைமங்கையாரணிகாரணியே.

(இ - ள்.) கமலந்தனில் இருப்பாள் - தாமரைமலரில் வீற்றிருப்பவளும், கடவுளர் - தேவர்கள், விருப்போடு - விருப்பத்துடனே, அம் கரம் கமலம் குவித்து - அழகிய கைகளாகிய தாமரைமலர்களைக் கூப்பி [அஞ்சலிசெய்து], போற்றும் - துதிக்கின்ற, மெல் பூவை - மென்மையான கிளிபோன்றவளும், ஆரணி - வேதங்களின் சொரூபமாயிருப்பவளும், காரணி - (எல்லாவற்றிற்கும்) காரணமாயிருப்பவளும் (ஆகிய), கலை மங்கை - கலைமகள்,—ஒரு கால் தம் கருத்துள் வைப்பார் கம் மலம் - (தன்னை) ஒருமுறை தமது மனத்தினுள் வைத்துத் தியானிப்பவர்களுடைய அறிவின்குற்றங்களை,—கண்ணில் கருணை கமலந்தனை கொண்டு கண்டு - (தனது) திருக்கண்களினின்று வெளியாகிற அருள்வெள்ளத்தைக்கொண்டு (அவர்களைக்) கடாக்ஷித்து, கழிக்கும் - போக்கிவிடுவாள்; (எ - று.)

கமலம் என்ற வடசொல்-முதலிரண்டடிகளில் தாமரையென்ற பொருளிலும், மூன்றமடியில் நீரென்ற பொருளிலும் வந்தது. கம் - அறிவு; இந்திரியமுமாம். இதற்குத் தலையென்று ஒருபொருளுள்ளதனால், கமலம் என்பதற்கு-தலைவிதியென்று பொருள்கொள்ளுதலும் ஒன்று; அன்றி, கமலமென்பதை அகமலம், அல்லது பாதகமலம் என்பதன் முதற்குறைவிகாரமெனக் கொண்டாலும் பொருள்படும். மனக்குற்றம் அல்லது பாவதோஷம் எனக் காண்க. விருப்பு-அன்பு, பக்தி; விரும்பு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். கடவுளர் - (இவ்வுலகசம்பந்தத்தைக்) கடத்தலையுடைய

வர். கடவுள் என்பதில், உள் - தொழிற்பெயர்விகுதி. 'ஒருகால்' என்பதனை 'கண்டு' என்பதோடு சேர்த்து ஒருமுறை அருளோக்கஞ் செய்தமாத்திரத்தில் தீர்த்திடுவாள் என்றுங் கொள்ளலாம். (கக)

உ௦. காரணன்பாகமுஞ்சென்னியுஞ்சேர்தருகன்னியரு
நாரணனாகமகலாத்திருவு மொர்நான்மருப்பு
வாரணன்றேவியு மற்றுள்ளதெய்வமடந்தையரு
மாரணப்பாவைபணித்தகுற்றேவலடியவரே.

(இ - ள்.) காரணன் - காரணமென்னும் ஆகமத்தில் எடுத்துச்சொல்லப்பட்டவனான சிவபிரானது, பாகமும் - இடப்பக்கத்திலும், சென்னியும் - முடியின்மேலும், சேர்தரு - (முறையே) சேர்ந்துள்ள, கன்னியரும்-இளமகளிரான பார்வதி கங்கை யென்பவர்களும்,—நாரணன் ஆகம் அகலா திருவும் - திருமாலினதுமார்பை விட்டுநீங்காத [மார்பில்நித்தியவாசஞ்செய்கிற] இலக்குமியும்,—ஓர் நால் மருப்பு வாரணன் தேவியும் - ஒப்பற்ற நான்குதந்தமுள்ளஐராவதமென்னும் யானையையுடையவனான இந்திரனதுமனைவியாகிய இந்திராணியும், மற்று உள்ள தெய்வம் மடந்தையரும் - மற்றைய தேவமாதர்களும், (ஆகிய அனைவரும்), ஆரணம் பாவை பணித்த குறு ஏவல் அடியவரே-வேதங்களின் சொரூபமான சரசுவதிதேவி கட்டளையிட்ட சிறியஏவல்தொழில்களைச் செய்யும் அடியார்களே யாவர்; (எ - று.)

என்றது, அறிவுக்குஉரிய தெய்வமான சரசுவதியினது தலைமையை மிகுதியாகப் புகழ்ந்து துதித்தவாறும். காரணம் - சைவாகமநூல் இருபத்தெட்டில் ஒன்று; இங்கே காரணன் என்றது, உபலக்ஷணவகையால் எல்லாஆகமங்களினாலும் பிரதிபாதிக்கப்படுகிறவ னென்றவாறும். இனி, யாவர்க்கும் முதல்வராகிய திரிமூர்த்திகளில் ஒருவனென்றகருத்தால் காரணன் எனக் கூறியதாகக் கொள்ளுதலும் ஒன்று. மலையரசனாகிய இமவானினது பெண்களாகிய உமை கங்கை என்ற இருவரும் சிவபிரானைச்சேர்ந்தனராதலால், 'காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியர்' எனப்பட்டனர். கங்கையைச் சிவபிரானுக்கு மனைவியென்றற்குக் காரணம் - சிவபிரானைநீங்காது சேர்ந்திருத்தலும், குமாரனையுண்டாக்குதற்குச் சிவபிரான்வெளிப்படுத்திய அனற்பொறிகளை யேற்றுக்கொண்டமையுமாம்.

உமை சிவன்பாகஞ்சேர்ந்த கதை:—பிருங்கி யென்னும் மகாமுனிவர் தன்னைவிலக்கிச் சிவபிரானை மாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்யக்கண்ட பார்வதிதேவி, தன்பதியை நோக்கி 'முனிவர்என்னைப்பிரதக்ஷிணம் செய்யாமைக்கு ஏது என்?' என்று வினவ, சிவபிரான் 'இம்மைமறுமைப்பயன்களைப் பெற விரும்புபவர் உன்னையும், முத்திபெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானைப் பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம் பெற்றன ளென்பதாம்.

கங்கை சிவபிரான் சென்னி சேர்ந்த கதை:—சூரியகுலத்துத் தோன்றிய பகீரதசக்கரவர்த்தி, கபிலமுனிவரதுகண்ணின் கோபத்தீக்கு இலக்காய் உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனது மூதாதையரானசகரபுத்திரர்

அறுபதினாயிரவரையுமற்கதி பெறுவிக்கும்பொருட்டுநெடுநாள் தவஞ்செய்து கங்காநதியைத் தேவலோகத்திலிருந்து கீழுலகத்துக்குக் கொணர்கையில் அதனது விசைபோடுவரும் வெள்ளப்பெருக்கை ஏற்றுக்கொள்ளுதற்கு ஏற்ற வலிமை பூமிக்குஇல்லையென்ற காரணத்தால் அவ்வரசன் சிவபிரானைப்பிரார்த்திக்க, அவன்வேண்டுகோளின்படி அப்பெருமான் அந்நதியைச் சடைமுடியிலேற்றுப் பின்பு சிறிதுசிறிதாகப் பூமியில் விட்டருளினனென்பதாம்.

காரணம், பரிகம், வாரணம் - வடசொற்கள். கங்யா, நாராயணன் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. சேர்தரு, தாஎன்ற துணைவினை விகாரப்பட்டது. குறுமை + ஏவல்=குற்றேவல்; பண்புகூறுபோய்த்தன் ஒற்று இரட்டிற்று. ஓர்-ஒன்று என்பதன்விகாரம்; உகரம்பெறாமலும், முதல்நீளாமலும் நின்றது.

உக. அடிவேதநாறுஞ்சிறப்பார்ந்தவேதமனைத்தினுக்கு
முடிவே தவளமுளரிமின்னே முடியாவிரத்ன
வடிவே மகிழ்ந்துபணிவார்தமதுமயலிரவின்
விடிவே யறிந்தெனையாள் வார்தலந்தனில்வேறிலையே.

(இ - ள்.) அடி வேதம் நாறும் சிறப்பு ஆர்ந்த - திருவடிகள் வேதங்களில்வாசனைவீசப்பெறுகிற மேன்மைநிறைந்த, வேதம் அனைத்தினுக்கும் முடிவே - வேதங்களெல்லாவற்றுக்குந் தேர்ந்தகருத்தாகவுள்ளவளே! தவளம் முளரி மின்னே - வெண்டாமரைமலரில் வீற்றிருக்கிற மின்னற்கொடி போல விளங்குபவளே! முடியா இரத்ன வடிவே - அழியாத இரத்தினம் போலப் பிரகாசிக்கிற வடிவமுடையவளே! மகிழ்ந்து பணிவார்தமது மயல் இரவின் விடிவே - அன்புகொண்டு வணங்கும் அடியார்களுடைய அஞ்ஞான மயக்கமாகிய இருளிரவை யொழிக்குஞ் சூரியோதயமாகவுள்ளவளே! என்னை அறிந்து ஆள்வார்-எனது நிலைமையை அறிந்து என்னை அடிமைகொண்டு பாதுகாப்பவர், தலந்தனில் - இவ்வுலகத்தில், வேறு இல்லை - (உன்னையன்றி வேறு யாருமில்லை; (எ - று.)—ஏ - தேற்றம்.

தமக்குக் கலைமகளையன்றி வேறுகதியின்மையை வெளியிட்டார். 'அடி வேதம்நாறும் சிறப்பார்ந்த' என்றது, சரசுவதிக்குஅடைமொழி; அவளுடைய திருவடி வேதங்களிற்பரிமளித்தலாவது-வேதங்களில் எங்கும்இடைவிடாது துதிக்கப்படுதல். திருவடித்தாமரையென்னும் வழக்கை உட்கொண்டு, 'அடி நாறும்' என்றனரென்க. இனி, திருவடிகள் வேதங்களின்வாசனைவீசப் பெற்ற என்று பொருளுரைத்தாலும் முன்போலவே கருத்துக்கொள்ளலாம் (வில்லிபுத்தூரார் பாரதத்தில் "கங்கையு நான்மறையுந் துளவுங் கமழ் கழலிணை", "கங்கையினறலுங் காளியன்முடியுங் காளிந்திக்கரையுமே கமழும், பங்கயமலர்கள்" என்றவை இங்கு ஒப்புநோக்கத்தக்கன.) வேதம் அனைத்தினுக்கும் முடிவு - வேதங்களின் உத்தரபாகமும் தேர்ந்தகருத்து மான வேதாந்தத்திற் சித்தாந்தஞ்செய்யப்பட்ட மெய்ப்பொருளாக வுள்ளவளென்றபடி; வேதாந்தசொரூபமாகவுள்ளவளென்றலும் ஒன்று. தவளம், ரத்நம் - வடசொற்கள். முளரி - முட்களையுடைய அரியையுடைய தெனப் பொருள்படுங் காரணக்குறி. வேற்றுமைத்தொகையன்மொழி. அரி=அரை;

தண்டின் மேற்புறம். மின் - உவமையாகுபெயர். விடிவு - பொழுதுவிடியுங்காலம். சூரியோதயம். தன் அடியார்களின் அகவிருளை யொழிப்பவளென்பது, 'பணிவார்தமது மயலிரவின் விடிவே' என்பதன் கருத்து. (உக)

உஉ. வேறிலையென்றுனடியாரிற்கூடிவிளங்குநின்பேர்
கூறலையானுங்குறித்துநின்றே னைம்புலக்குறும்பா
மாறலைகள்வர்மயக்காமனின்மலர்த்தாணெறியிற்
சேறலையீந்தருள்வெண்டாமரைமலர்ச்சேயிழையே.

(இ - ள்.) வெள் தாமரை மலர் - வெண்டாமரைபூவில் வீற்றிருக்கின்ற, சேயிழையே - செவ்விய ஆபரணங்களையுடையவளே!— வேறு இலை என்று - (உன்னையன்றி, வேறு (கதி) இல்லையென்று நிச்சயித்து, உன் அடியாரில் யானும் கூடி - உனது அடியார்களில் நானும் ஒருவனாகச் சேர்ந்து, விளங்கும் நின் பேர் கூறலை குறித்து நின்றேன் - சிறப்புப்பெற்று விளங்குகிற உனது திருநாமங்களைச் சொல்லுதலைக் குறிக்கொண்டுநின்றேன்; ஐம்புலம் குறும்பு ஆம் - பஞ்சஇந்திரியங்களின் பொல்லாங்குகளாகிய, மாறு அலை கள்வர் - எதிர்த்து (வழி) பறிக்கிற திருடர்கள், மயக்காமல் - (என்னை) மயங்கச்செய்யவொட்டாதபடி, நின் மலர் தாள் நெறியில் சேறலை - உன்னுடைய திருவடித்தாமரைகளின் வழியே செல்லுந்திறத்தை, ஈந்து அருள் - (எனக்குக்) கொடுத்தருள்வாய்; (எ - று.)

("நல்லவை செய்யத் தொடங்கினும் சோனுமே, அல்லன அல்லவற்றிற் கொண்டுய்க்கும்-எல்லி, வியனெறிச் செல்வாரை யாறலைத்துண்பார், செலவுபிழைத் துய்ப்பபோல்" என்றபடி) நேர்வழியிற் செல்பவரை வழிக்கொள்ளைக்காரர் அதைவிட்டுக் கொடுவழியிற் செல்லும்படி சூழ்ச்சிசெய்வது போல, எனதுபஞ்சஇந்திரியங்கள் என்னைமயக்கித் தீநெறிச்செலுத்தாதபடி நீ என்பக்கல் அருள்செய்து என்னை உன்திருவடியை விடாது பின்பற்றிச் செல்லுதலாகிய நன்னெறியிற் செலுத்தவேண்டு மென வேண்டியபடி.

பேர் - மரூஉ. 'குறும்பாமாறலைகள்வர்' என்னுந்தொடரை குறும்பாம் ஆறு அலை கள்வர் எனப்பிரித்து, ஆறு அலை கள்வர் - வழிபறிக்குந் திருடர் என்று பொருள்கொள்ளுதல் பொருந்து மாயினும் மோனைத்தொடைக்குச் சேராமை அறிக. அலைகள்வர்-பிறவினையில்வந்த வினைத்தொகை. சேறல் - செல்லுதல்; தொழிற்பெயர்; செல் - பகுதி, தல் - விகுதி, பகுதிமுதல்நீண்டது - விகாரம், தகரம் றகரமான விடத்து லகரம் கெட்டது - சந்தி. சேயிழை - பண்புத்தொகையன்மொழி; செம்மை + இழை = சேயிழை; இங்கே, செம்மை:-அழகு; நிறமெனக் கொள்ளலாகாது; "வெள்ளைக்கலை யுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை ... ..தாய்" ஆதலால். கள்வர், கள் - பகுதி, வ் - பெயரிடைநிலை. (உஉ)

உந. சேதிக்கலாந்தர்க்கமார்க்கங்க ளெவ்வெவர்சிந்தனையுஞ்
சோதிக்கலா முறப்போதிக்கலாஞ்சொன்னதேதுணிந்து
சாதிக்கலா மிகப்பேதிக்கலா முத்திதானெய்தலா
மாதிக்கலாமயில்வல்லிபொற்றாளையடைந்தவர்க்கே.

(இ - ள்.) ஆதி - பழமையான, கலா மயில் - கல்விக்கு உரிய மயில் போலுஞ் சாயலுள்ள மகளும், வல்லி-பூங்கொடிபோன்றவளுமான சரசுவதியினது, பொன் தாளே - அழகிய திருவடிகளே, அடைந்தவர்க்கு - சரணமடைந்தவர்களுக்கு,—தர்க்க மார்க்கங்கள் சேதிக்கல் ஆம் - (தம்மையெதிர்த்து வாதப்போர் செய்பவர்களுடைய) வாதநெறிகளைக் கண்டித்தல்இயலும்; எவ்வெவர் சிந்தனையும் சோதிக்கல் ஆம் - யார்யாருடைய மனத்தின் நிலைமையையும் ஆராய்ந்தறிதல் இயலும்; உற போதிக்கல் ஆம் - (எல்லோர்க்கும் எல்லாவிஷயங்களையும்) நன்றாகச்சொல்லியுணர்த்துதல் இயலும்; சொன்னதே துணிந்து சாதிக்கல் ஆம் - தாம் சொன்ன பொருளையே சித்தாந்தமாக நிச்சயித்து நிலைநாட்டவல்ல திறமை உண்டாம்; மிக பேதிக்கல் ஆம் - (தமது கொள்கைக்கு மாறாகப் பிறர்சொன்ன பூர்வபக்ஷங்களையெல்லாம்) மிகுதியாகக் கண்டிக்குந் திறம் உண்டாம்; முத்தி தான் எய்தல் ஆம் - மோக்ஷத்தை எளிதில் அடைதல் கைகூடும்; (எ - று.)

சரசுவதியைச் சரணமடைந்தார்க்கு அவளருளால் இம்மையிலுண்டாகும் வாதசக்தி போதநாசக்தி முதலிய சக்திவிசேஷங்களும், மறுமையில் முத்தியும் கைகூடுகிற சிறப்பை இதில் வெளியிட்டார்.

சேதிக்கல், சோதிக்கல், சாதிக்கல், பேதிக்கல் என்றவற்றின் பகுதி - வடமொழியடியாப்பிறந்த வினை; கு - சாரியை, அல்-விகுதி. தர்க்கமார்க்கம், சிந்தநா, முத்தி, ஆதி, வல்லீ - வடசொற்கள். கலா - வடசொல், ஆவீறு ஐயாகாது நின்றது. எவ்வெவர் என்றதில், அடுக்கிநின்ற வினா - எஞ்சாமைகுறிப்பது. சொன்னது - இறந்தகால வினையாலணையும்பெயர்; இதில், 'இன்' இடைநிலை முதல் தொக்கது. எய்தல் என்ற தொழிற்பெயரில், எய்து - பகுதி, அல்-விகுதி: (அம்புசெலுத்துத லென்னும் பொருளில், எய் - பகுதி, தல் - விகுதி.) (உங)

உச. அடையாளநாண்மலரங்கையிலேடுமணிவடமு
முடையாளைநுண்ணிடையொன்றுமிலாளையுபநிடதப்
படையாளையெவ்வுயிரும்படைப்பாளைபதுமநறுந்
தொடையாளையல்லது மற்றினியாரைத்தொழுவதுவே.

(இ - ள்.) நாள் நமர் - அன்றுமலர்ந்த தாமரைப்பூப்போன்ற, அம் கையில் - அழகிய கைகளில், ஏடும் - ஏட்டுப் புத்தகத்தையும், அணி வடமும் - அழகிய ஜபமாலையையும், அடையாளம்-தனக்குஉரிய அறிகுறியாக, உடையாளை - கொண்டுள்ளவளும், நுண் இடை ஒன்றும் இலாளை - நுட்பமான இடை சிறிதும்இல்லாதவளும், உபநிடதப் படையாளை - உபநிஷத்துக்களைத் தன் பரிவாரமாக வுடையவளும், எ உயிரும் படைப்பாளை - எல்லாப்பிராணிகளையும்சிருஷ்டிப்பவளும், நறுபதுமம்தொடையாளை - வாசனைவீசுகிற செந்தாமரைமலர்மாலையை யுடையவளுமான சரசுவதியை, அல்லது - அல்லாமல், இனி மற்று யாரைதொழுவது-இனிமேல் (யான்) வேறு யாரை வணங்குவது? (எ - று.)

வேறுயாரையும் வணங்கே னென்றும், பிறரெவரும் வணங்குதற்கு உரியரல்லரென்றும், கூறியபடியாம். இனி, 'இனி' என்றது - அவளைச்சரணம

டைந்தபின்பு என்றபடி. சரசுவதி இடக்கையிற் புத்தகத்தையும், வலக்கையிற் படிகமாலையையும் உடையளென அறிக. இவை சரசுவதிக்கு அடையாளயாகக் கூறப்படுதலை, பெருந்தேவனார் பாரதத்தில் "புத்தகமு ஞானத்துமுத் திரையும் பொற்பளிங்கும், வைத்த கமண்டலமும் வன்னிகையும் - முத்து, வடங்கொண்ட மார்பினள்" என்றதனாலும், கம்பராமாயணத்தில் "புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான, வித்தகந் தரித்த செங்கை விமலை" என்றதனாலும், காண்க. இனி, நாள் மலர் என்பதற்கு-புதியதாமரை மலர்களையும் என்று பொருள் கொண்டு, நான்குகைகளுள் மற்றையஇரண்டில் தாமரைமலர்களைத் தரித்துள்ளாளென்றலு மொன்று.

இனி, அடையாளமென்றது, ஞானமுத்திரையாகவுமாம்; அதாவது - பிறர்க்கு நல்லுணர்வை உபதேசிக்கும் அறிகுறி; அது - கட்டைவிரல்நுனியையும் சுட்டுவிரல்நுனியையும் ஒன்றுசேர்த்து மற்றை மூன்று விரல்களையும் நேர்நிற்க வைக்கும் நிலை. படிகமாலை, ஜபமந்திரத்தைத் தொகையிடுதற்கு உரியது. மணிவடமெனப் பதம்பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்கு இயையாது. இடை மிகச்சிறுத்துள்ளதென்னும் பொருளில் அதிசயோக்தி வகையால் அதை இல்லையென்றே சொல்லுங் கவிமரபு பற்றி, 'நுண்ணிடையொன்றுமிலாள்' என்றார். உபநிஷதம், பத்மம் - வடசொற்கள். உபநிடதப் படையாள் என்றது - உபநிடதங்களுக்குத் தலைவி யென்றும், அவற்றால் வழிபட்டுத் துதிக்கப்படுபவ ளென்றுங் கூறியபடியாம்: மூன்றாமடியில் 'படையாள்,' 'படைப்பாள்' என்ற சொற்கள் இங்கு வெவ்வேறுபொருளில் வந்தாலும் ஒன்றுக்கொன்று எதிர்மறையான பொருளுந் தரக்கூடியதனால் அவற்றைஒருங்குதொடரவைத்தது, தொடைமுரண்; "மொழியினும்பொருளினும்முரணுதல்முரணே"என்றார் தொல்காப்பியனார். இது-சொல்தொடைமுரண். இரண்டாம் அடியில், 'உடையாள்' 'இலாள்' என்பன வந்தது, பொருள்தொடைமுரண். தொடை - தொடுக்கப்படுவது. மற்று - இடைச்சொல். தொழுவது என்ற தொழிற்பெயர் - இங்கே வினைமுற்றாய் நின்றது.

உரு. தொழுவார்வலம்வருவார்துதிப்பார்தந்தொழின்மறந்து
விழுவாரருமறைமெய்தெரிவாரின்பமெய்புளகித்
தழுவாரினுங்கண்ணினீர்மல்குவாரென்கணுவதென்னை
வழுவாதசெஞ்சொற்கலைமங்கைபாலன்புவைத்தவரே.

(இ - ள்.) வழுவாத - தவறுபடாத, செம் சொல் - செவ்விய சொற்களையுடைய, கலை மங்கைபால் - கல்விக்கு உரிய மகளான சரசுவதியினிடத்தில், அன்பு வைத்தவர்-பக்தியுள்ளவர்கள்,—(அப்பிராட்டியை), தொழுவார்-நமஸ்கரிப்பார்கள்; வலம் வருவார்-பிரதக்ஷிணஞ்செய்வார்கள்; துதிப்பார் - தோத்திரம்பண்ணுவார்கள்; தம் தொழில் மறந்து - தமதுசெயலை மறந்து [பரவசப்பட்டு], விழுவார் - கீழ்விழுவார்கள்; அரு மறை மெய் தெரிவார் - (அறிதற்கு) அரிய வேதங்களின் உண்மைப்பொருளை உணர்வார்கள்; இன்பம் - ஆனந்தத்தால், மெய் புளகித்து - உடல் மயிர்சிலிர்க்கப்பெற்று, அழுவார் - புலம்புவார்கள்; இனும் - இன்னும், கண்ணின் நீர் மல்குவார் - ஆனந்

தக்கண்ணீர்பெருகப்பெறுவார்கள்; என் கண் ஆவது என்னை - (இப்படிப்பட்ட செயல்களுள்) என்னிடத்து உண்டாவது யாது? [எதுவுமில்லை என்றபடி.]

பக்திகாரியமான மெய்ப்பாடொன்றும் என்னிடத்தில் இல்லை யென்று கவி தமது விநயத்தை வெளியிட்டபடியாம். இனும் - தொகுத்தல். என் கண், கண் - ஏழனுருபு. (உரு)

உசா. வைக்கும்பொருளுமில்வாழ்க்கைப் பொருளுமற்றெப்பொருளு
பொய்க்கும்பொருளன்றிநீடும்பொருளல்லபூதலத்தின் [ம்
மெய்க்கும்பொருளுமழியாப்பொருளும்விழுப்பொருளு
முய்க்கும்பொருளுங்கலைமானுணர்த்துமுரைப்பொருளே.

(இ - ள்.) வைக்கும் பொருளும் - (பாடுபட்டுத் தேடி) வைக்கும், (பொன்னும் மணியும் நெல்லுமாகிய) செல்வங்களும், இல்வாழ்க்கை பொருளும் - சம்சாரவாழ்விலுள்ள (மக்களும் சுற்றமுமாகிய) ஐசுவரியங்களும், மற்று எ பொருளும் - (ராஜாங்கம் வாகனம் அடிமை என்னும்) மற்றை ஐசுவரியங்களும் (ஆகிய அஷ்டைசுவரியங்களும்), பொய்க்கும் பொருள் அன்றி - நிலையின்றி அழியும் பொருள்களாகுமேயல்லாமல், நீடும் பொருள் அல்ல - (அழிவின்றி) நீடூழிகாலம்நிலைத்துநிற்கும் பொருள்களல்ல; பூதலத்தில் மெய்க்கும் பொருளும்), - நிலவுலகத்தில் [இம்மையில்] அழியாதுநிலைத்துநிற்கும் பொருளும், அழியாபொருளும் - (மறுமையில்) அழிவில்லாத ஐசுவரியமும், விழு பொருளும்-(இவற்றினும்) சிறந்ததான முத்திச்செல்வமும், உய்க்கும் பொருளும் - (முத்தியிற்) சேர்ப்பதான தத்துவப்பொருளும், கலை மான் உணர்த்தும் உரை பொருளே-கல்விக்கு உரிய மகளான சரசுவதி சொல்லுஞ் சொற்களின் பொருளேயாம்; (எ - று.)

செல்வப்பொருள்போ லன்றிக் கல்விப்பொருள் சாசுவதமாயிருக்குந் தன்மையும், சரசுவதியின் உருவமான சொல் நித்தியமென்றலும், இங்கு விளக்கப்பட்டன. இல் - வீடு: அதில் வாழ்தல் - இல்வாழ்க்கை. வாழ்க்கை - ஐகவிகுதி பெற்ற தொழிற்பெயர். விழு - சிறப்பையுணர்த்தும் விழுமம் என்னும் உரிச்சொல்லின் விகாரம். மான்- உவமையாகுபெயர். (உசா)

உஎ. பொருளா விரண்டும்பெறலாகுமென்றபொருள்பொருளோ
மருளாதசொற்கலைவான்பொருளோபொருள்வந்துவந்தித்
தருளாய்விளங்குமவர்க்கொளியாயறியாதவருக்
கிருளாய்விளங்குநலங்கிளர்மேனியிலங்கிழையே.

(இ - ள்.) வந்து - (அருகில்) வந்து, வந்தித்து-(தன்னை) நமஸ்கரித்து அருள் ஆய் - (தனது) திருவருளுக்கு இலக்காகி, விளங்குமவர்க்கு - சிறப்புற்றவர்களுக்கு, ஒளி ஆய் - பிரகாசமாகி [புலனாய்த்தோன்றி], அறியாதவருக்கு இருள் ஆய் -(தனதுமகிமையை) உணராதவர்களுக்குப் புலனாகாதுநின்று, விளங்கும் - சுயம்பிரகாசமாய் விளங்குகின்ற, நலம் கிளர் மேனி - அழகு மிக்க திருமேனியையும், இலங்கு இழையே - விளங்குகிற ஆபரணங்களையு

முடையவளான சரசுவதியே! பொருளால் இரண்டும் பெறல் ஆகும் என்ற பொருள் பொருளோ - ('அறம் பொருள் இன்பம் என்ற திரிவர்க்கத்தில் இடையிலுள்ளதான) பொருளினால் (அறமும் இன்பமுமாகிய மற்றை) இரண்டுபொருள்களையும் அடையலாம்' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட செல்வப்பொருள் சிறந்தபொருளாமோ? [ஆகா], மருளாத சொல் கலை பொருளோ வான் பொருள் - அறியாமையது மயக்கத்தை யொழிக்கிற சொற்களையுடைய கல்விப்பொருளோ வெனின் சிறந்த பொருளாம்; (எ - று.)

கலைமகளாகிய உனக்கு உரியதான கல்விப்பொருளே சிறந்த பொருளாமென்றும், மற்றை அழியுந்தன்மையதான செல்வப்பொருள் அப்படிப்பட்ட சிறந்தபொருள் அன்றென்றும் கவி தாம் சரசுவதியின் விபவத்தை அறிந்து பாராட்டுந்தன்மையை அப்பிராட்டியின் சன்னிதியிலே விண்ணப்பஞ்செய்ததாகும், இது. பொருளா லிரண்டும் பெறலாகுமென்ற பொருள் - "அறனீனு மின்பமுமீனுந்திறனறிந்து, தீதின்றிவந்தபொருள்", "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொரு, ளேனையிரண்டு மொருங்கு", "வடுவிலாவையத்து மன்னிய மூன்றில், நடுவணதெய்த இருதலையுமெய்தும் நடுவணது எய்தாதா னெய்தும் உலைப்பெய்து, அடுவதுபோலுந்துயர்", "பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்றும், ஆராயிற்றானே யறம்பொருளின்ப மென்று. ஆராரிவற்றி னிடையதனை யெய்துவார், சீராயுருகலையு மெய்துவர்", "இல்லார் இருமையும் நல்லஎய்தார்", "வறியார் இருமை யறியார்" என்பன காண்க. வான் - உரிச்சொல். முதலடியில், ஓகாரம் - எதிர்மறை; இரண்டாமடியில், ஓகாரம் - தெரிநிலை. (உஎ)

உஅ. இலங்குந்திருமுகமெய்யிற்புளகமெழுங்கண்கணீர்
மலங்கும்பழுதற்றவாக்கும்வலிக்குமனமிகவே
துலங்குமுறுவல்செயக்களிகூருஞ்சுழல்புனல்போற்
கலங்கும்பொழுதுதெளியுஞ்சொன்மானைக்கருதினர்க்கே.

(இ - ள்.) சொல் மானை கருதினர்க்கு - சொற்களுக்கு உரிய மகளானசரசுவதியைத் தியானித்தவர்களுக்கு,—திரு முகம் - அழகிய முகம், இலங்கும் - (மலர்ந்து) விளங்கும்; மெய்யில் - உடம்பில், புளகம் எழும் - மயிர்ச்சிலிர்ப்பு உண்டாம்; கண்கள் நீர் மலங்கும் - கண்களில் ஆனந்தபாஷ்பம் தளும்பும்; பழுது அற்ற வாக்கும் வலிக்கும்-குற்றமில்லாத வாய்ச்சொல்லும் உறுதிபெறும்; மனம் மிகவே துலங்கும் - மனம் மிகுதியாகத் தெளிவுபெறும்; முறுவல்செய களி கூரும் - புன்சிரிப்புஉண்டாம்படி சந்தோஷம் மிகும்; சுழல் புனல் போல் கலங்கும் பொழுது தெளியும் - நீர்ச்சுழிபடுகிற நீர்போலக் கலக்கமுண்டாம்பொழுது அக்கலக்க மொழியும்; (எ - று.)

"உறுங் கவலொன் றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வி" ஆதலால், 'சுழல்புனல்போற் கலங்கும்பொழுது தெளியும்' எனப்பட்டது. வாக்குவலிக்கும் என்பதற்கு - சிறந்தசொற்கள் வெளிவருமென்றும், செல்வாக்குஉண்டாகுமென்றுங் கருத்துக் காண்க. வாக் - வடசொல். செய - தொகுத்தல்.

௨௯. கரியாரளகமுங்கண்ணுங்கதிர்முலைக்கண்ணுஞ்செய்ய
சரியார்கரமும்பதமுமிதழுந்தவளநறும்
புரியார்ந்ததாமரையுந்திருமேனியும்பூண்பனவும்
பிரியாதென்னெஞ்சினுநாவினுநிற்கும்பெருந்திருவே.

(இ - ள்.) பெருந் திருவே - (உன்னைச்சரணமடைந்தவர்க்குப்) பெருஞ் செல்வமுண்டாதற்குக்காரணமான கலைமகளே!—(உனது), கரி ஆர் அளகமும் - கருநிறம்பொருந்திய முன்னெற்றிமயிரும் [கூந்தலும்],—கண்ணும் - கண்களும்,—கதிர் முலைக்கண்ணும் - ஒளிபொருந்திய முலைக்கண்களும்,—செய்ய - சிவந்த, சரி ஆர் - வளையல்கள் நிறையஅணியப்பெற்ற, கரமும் - கைகளும்,—பதமும் - திருவடிகளும்,—இதழும் - அதரமும்,—தவளம் நறும் புரி ஆர்ந்த தாமரையும்-நல்லமணமுடையதும் முறுக்குடையதுமான வெண்டாமரைமலரும்,—திருமேனியும் - உடம்பின்நிறமும்,—பூண்பனவும் - அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் முதலியனவும், (ஆகிய உனதுசம்பந்தம்பெற்ற எல்லாப் பொருள்களும்), பிரியாது - விட்டுப்பிரியாமல், என் நெஞ்சினும் - எனது மனத்திலும், நாவினும் - நாக்கிலும், நிற்கும் - நிலைபெற்றிருக்கும்; (எ - று.)

என்றது, எப்பொழுதும் நான் உனது சம்பந்தம் பற்ற பொருள்களையே நினைத்தலும் புகழ்தலும் செய்வேனென்றவாறு. அளகம் - அலகம், வடசொல். (௨௯)

௩௦. பெருந்திருவுஞ்சயமங்கையுமாகியென்பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ்செஞ்சொல்வஞ்சியைப்போற்றி லெல்லாவுயிர்க்
பொருந்தியஞானந்தருமின்பவேதப்பொருளுந்தரும் [கும்
திருந்தியசெல்வந்தருமழியாப்பெருஞ்சீர்தருமே.

(இ - ள்.) பெரு திருவும் சயமங்கையும் ஆகி - ஸ்ரீமகாலக்ஷ்மியின் சொரூபமும் ஜயலக்ஷ்மியின்சொரூபமுமா யுள்ளவளும், என்பேதைநெஞ்சில் இருந்து அருளும் - எனது அறிவின்மையையுடைய மனத்தில் வீற்றிருக்கின்றவளும் (ஆகிய), செம் சொல் வஞ்சியை - செவ்வியசொற்களுக்கு உரிய மகளான சரசுவதியை, போற்றில் - துதித்தால்,—(அவள்), எல்லா உயிர்க்கும் - (துதிக்கின்ற) அச்சனங்களெல்லோர்க்கும், பொருந்திய ஞானம் தரும் - நிலையான நல்லுணர்வை அளித்தருள்வாள்; இன்பம் வேதம் பொருளும் தரும் - பேரின்பத்தைக்கூறுகிற வேதத்தின்பொருளையும் விளக்கியருள்வாள்; திருந்திய செல்வம் தரும் - சுத்தமான செல்வத்தைக் கொடுத்தருள்வாள்; அழியா பெரு சீர் தருமே - அழிவற்றதான பெரியமுத்திச்செல்வத்தையுந் தந்தருள்வாள்; (எ - று.)

அழியாப்பெருஞ்சீர் - என்றும் அழிதலில்லாத பெருங்கீர்த்தி யெனினுமாம். வஞ்சி - நீர்வஞ்சிக்கொடி; அதுபோல மெல்லியளாய் ஒல்கியொசியும் மகளுக்கு உவமையாகுபெயர். (௩௦)

சரசுவதியந்தாதி முற்றிற்று.

# செய்யுள்முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அடிவேதநாறுஞ் | ௨௨ |
| அடையாளநாண்மலர் | ௨௪ |
| அருக்கோதயத்தினுஞ் | ௧0 |
| ஆயகலைகள் | ௫ |
| இயலானதுகொண்டு | ௧0 |
| இலங்குந்திரு | ௨௬ |
| இனிநானுணர்வ | ௧௨ |
| உரைப்பாருரைக்கும் | ௯ |
| ஒருத்தியை | ௧௫ |
| கமலந்தனி | ௨0 |
| கரியாரளகமும் | ௨௭ |
| கருந்தாமரை | ௧௮ |
| காரணன்பாகமுஞ் | ௨௧ |
| சரோருகமே | ௧௮ |
| சீர்தந்த | ௭ |
| சேதிக்கலாந் | ௩ |
| தனக்கேதுணி | ௧௯ |
| தேவருந்தெய்வப் | ௧௫ |
| தொழுவார்வலம் | ௨௫ |
| நாயகமான | ௧௭ |
| படிகநிறமும் | ௬ |
| பாதாம்புயத்திற் | ௧௨ |
| பாவுந்தொடையும் | ௧௩ |
| புத்தியிற்கூரிருள் | ௧௪ |
| புரிகின்றசிந்தையி | ௧௬ |
| பெருந்திருவுஞ் | ௨௭ |
| பொருளாலிரண்டும் | ௨௬ |
| மயிலேமடப்பிடியே | ௧௧ |
| வணங்குஞ்சிலை | ௮ |
| வேதமும்வேதத்தி | ௧௭ |
| வேறிலையென்று | ௨௩ |
| வைக்கும்பொருளும் | ௨௫ |

## வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்புப் புஸ்தகங்கள்.

### கம்பராமாயணம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| பாலகாண்டம் முழுவதும் உரையுடன் | ... | 5 | 0 | 0 |
| அயோத்யாகாண்டம் ,, | ... | 5 | 0 | 0 |
| ஆரண்யகாண்டம் ,, | ... | 4 | 0 | 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் ,, | ... | 4 | 8 | 0 |
| சுந்தரகாண்டம் ,, | ... | 5 | 0 | 0 |
| யுத்தகாண்டம் 2 வால்யூம்கள் | ... | 10 | 0 | 0 |
| வில்லிபாரதம் சபாப[illegible] உரையுடன் | ... | 3 | 0 | 0 |
| ஷை உத்தியோகப[illegible] உரையுடன் | ... | 2 | 8 | 0 |
| ஷை வீட்டும துரோண கர்ண பருவங்கள் உரையுடன் | (அச்சில்) | | | |
| ஷை சல்லிய சௌ[illegible] பருவங்கள் உரையுடன் | ... | 1 | 8 | 0 |
| பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச்செய்த அஷ்[illegible]தம் விரிவான உரையுடன் | ... | 3 | 8 | 0 |
| நித்தியாநுஸந்தாநம் தென்கலை | ... | 0 | 12 | 0 |
| ஷை வடகலை | ... | 0 | 10 | 0 |
| ஸ்தோத்திர பாடம் (க்ரந்தாக்ஷரம்) | ... | 0 | 8 | 0 |
| நாலடியார் முழுவதும் உரையுடன் | ... | 2 | 0 | 0 |
| சடகோபரந்தாதி உரையுடன் | ... | 0 | 12 | 0 |
| சரசுவதியந்தாதி உரையுடன் | ... | 0 | 4 | 0 |
| திருவேங்கடக்கலம்பகம் உரையுடன் | ... | 0 | 10 | 0 |
| மதுரைக்கலம்பகம் உரையுடன் | ... | 0 | 10 | 0 |
| அழகர்கலம்பகம் உரையுடன் | ... | 0 | 10 | 0 |
| நாலாயிரதிவ்யப்ரபந்தம் (3-ம் பதிப்பு) | ... | 3 | 8 | 0 |
| ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் (2-ம் பதிப்பு) | ... | 2 | 8 | 0 |
| யதீந்த்ரப்ரவணப்ரபாவம் | ... | 1 | 0 | 0 |
| திருமந்த்ரார்த்தம் (முமுக்ஷுப்படி வ்யாக்யாநம்) | ... | 1 | 8 | 0 |
| திருப்பாவை (மூவாயிரப்படிவ்யாக்யாநம்) அரும்பதத்துடன் | | 2 | 0 | 0 |
| நன்னூற்காண்டிகையுரை | ... | 1 | 8 | 0 |
| விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் | ... | 1 | 0 | 0 |
| திருக்கச்சிநம்பிப் ப்ரபாவம் | ... | 0 | 4 | 0 |
| திருக்குறள் அறத்துப்பால் பரிமேலழகருரையும் அதற்குக் குறிப்புரையும் | ... | 1 | 8 | 0 |

### (திருவாய்மொழி வ்யாக்யாநங்கள்.) பகவத்விஷயம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற்பத்து | 6 | 0 | 0 | ஆறாம்பத்து | 6 | 0 | 0 |
| இரண்டாம்பத்து | 5 | 0 | 0 | ஏழாம்பத்து | 5 | 0 | 0 |
| மூன்றாம்பத்து | 5 | 0 | 0 | எட்டாம்பத்து | 5 | 0 | 0 |
| நான்காம்பத்து | 5 | 0 | 0 | ஒன்பதாம்பத்து | 6 | 0 | 0 |
| ஐந்தாம்பத்து | 6 | 0 | 0 | பத்தாம்பத்து | 6 | 0 | 0 |

மேற்கண்ட பத்துக்களை ஒரே தடவையில் வாங்குபவர்க்கு (பைண்டு) 10-வால்யூம்கள் ரூபா. 45; 5-வால்யூம்கள் ரூபா. 40.